தென்றல்

ஆசிரியர் ◆ கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா | வெளிநாடு மூன்றணா | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 3 | சென்னை | 23—6—56 | சனிக்கிழமை | இதழ் 1

பாழடைந்த கோட்டை என்ருல் பார்க்கவேண்டுமென்ற ஆசை பிறக்கிறது; சுற்றி வரும்போதே அந்தக் கோட்டையின் சோபிதமான இளமைப் பருவத்தை எண்ணிப் பெருமூச்செறிய வேண்டியிருக்கிறது. காலத்தால் மூப்படைந்து கருகிய கூந்தல் சாம்பல் பூத்து, நரம்பு சோர்ந்து நாடி தளர்ந்திருந்தால் அது பற்றிக் கவலை கொள்வார் இருக்க மாட்டார்கள். அழகுச் செல்வி அலங்கோலம் செய்யப்பட்டிருந்தால் கல் நெஞ்சும் கசிந்துருகி விடுகிறது.

அரளிக்கோட்டை, ஏவி விடப்பட்ட மனித மிருகங்களால் சூரணமாக்கப்பட்ட சுந்தர மாளிகை. மதம்பிடித்த யானைகளின் கால் பட்டுப் பொடியான வண்ணச் சிலைகளும், இதமழிந்த பெரும்படையால் சேதமாக்கப்பட்ட செல்வப் பொருள்களும், காணச் செல்வோரைக் கலங்க வைத்து அந்த இடிந்த கோட்டையை இழவு வீடாக்கி வைத்தன. நீரற்ற அகழி, நெடுஞ் சுவர் இடுக்குகளில் புற் பூண்டுகள், புதர்களில் விஷப் பூச்சிகள், பொந்துகளில் கிளிக் குடும்பம்! கோபுரம் போன்ற முகப்பு வாயில் இடிந்து சரிந்து கிடந்தது. இற்றுப் போன தேக்கு மரத் தூண்களில் தொங்கிக் கொண்டிருந்த தேன் ராட்டைகள் வற்றி வரண்டு காணப்பட்டன. அந்தப்புரப் பெண்கள் நீராடும் கிணறுகள் தூர்ந்துபோய்க் கிடந்தன. வெண்கலத்தாலான சிங்கச் சிலையொன்று நசுக்கப்பட்டிருந்தது. அந்தக் கோட்டையில் கொடி கட்டியாண்ட கொற்றவனின் இலாஞ்சினை சிங்கமாகத்தான் இருக்குமோ என்று எண்ணும் வகையில் அந்தச் சிங்கச் சிலை நசுக்கப்பட்டிருந்தது.

பல்லவ நாட்டில் இப்படி ஒரு கோட்டை மண் மூடி வருகிறது. வைதிகக் குடும்பத்தின் இளம் விதவை தற்கொலை செய்து கொண்டது போன்ற உணர்ச்சி ஏற்படுகிறது அந்தக் கோட்டையைச் சுற்றிப் பார்க்கும்போது. ஊதையும் ஒதுக்கித் தள்ளும் இலட்சிய சுபாவமுடையோருக்கும் அந்தக் கோட்டையைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டுமென்ற ஆசை எழத்தான் செய்யும்! அத்தனை அலங்கோலம்!

திருடர்களின் தீவினையோ, தீராத பகைவர்களின் கொடுஞ்செயலோ என்றும் எண்ணுவதற்கிடமில்லாமல், விலை பெற்ற பொருள்களெல்லாம் கேட்பாரற்றுக் கிடந்தன. கள்ளக் காதலர்கள் கொஞ்சி மகிழ்வதற்கும், கொள்ளைக் கூட்டத்தினர் கூடாரமடித்துக் கொள்வதற்கும், எழிலிழந்த அந்த அரளிக் கோட்டை ஏற்ற இடமாக இருந்தும் அங்கே மனிதப் பாதமே பட்டிருக்கவில்லை.

பொற்கூண்டு வனப்பும், கற்கோட்டைஉறுதியும் கொண்ட

மணி மண்டபம் ஒன்று கோட்டையின் மையத்தில் சிதைவுற்றுக் கிடந்தது. ஆண்ட வம்சத்தின் புகழ்பாடும் அழகோவியங்கள் மண்டபச் சுவர்களில் தீட்டப்பட்டிருந்தன.

சரித்திரப் பித்துக்கொண்ட நான், அந்த இடிந்த கோட்டைக்குள் புதையுண்டு கிடக்கும் சோகக் கதையை அறியத் துடித்தேன். அறிந்தனவற்றைச் சொல்கிறேன்:

காளிங்கராயன் கொங்கு நாட்டை ஆண்ட புகழ் மன்னன் காசினிக்கோர் நீதி மாணிக்கம்-வெற்றிச் சங்கு முழங்கி, வீர முரசம் ஒலித்து, கொற்றவரில் கண்ணியவான் என்று கீர்த்தி பெற்ற நல்லரசு-அவனுக்கு ஒரு மகன்—அவன்தான் அந்த அவனிக்கும் வாரிசு—**இராஜகேசரி** அவன் பெயர்.

தவழ்ந்து விளையாடி, தங்க நடை வண்டியில் நடைபயின்று, ராயரின் குலச் செல்வன் ராஜ குலதிலகமானுன். தலை குனியும் கன்னிப் பெண்கள், கேசரியின் தலை மறைந்தபின் திரும்பிப் பார்க்கும் எழில் பெற்ருன். பொன் கட்டிமேனி, பெண் மொய்க்கும் வனப்பு! கண்பட்டால் விழிகளைச் சிதறச் செய்யும் பளபளப்பு.

அரச குலம் யானைக்கு ஒப்பானது. அரசர்கள் உதவியை மறந்து விடுவார்கள். பழியை மறக்கமாட்டார்கள். காளிங்கராயனின் தந்தை விக்கி அண்ணன் பல்லவ நாட்டு அபராஜிதனுக்குக் கடன்பட்டு நொந்தவன். அந்தக் கவலையே அவனைக் கொன்று சிங்காதனத்தைக் காளிங்கராயனிடம் ஒப்படைத்திருந்தது.

தந்தை பட்ட கடனைக் கட்டிவிடவேண்டுமென்று எவ்வளவோ துடித்தான் காளிங்கராயன். ஆனால் விஷம்போல் ஏறிய வட்டித் தொகை ராஜ்யத்தையே ஈடு வைத்தாலும் கட்ட முடியாத அளவு வளர்ந்துவிட்டது. கையைப் பிசைந்தான், கண்ணீர் சிந்தினான்; பட்டாடை நனைந்ததே தவிர பட்ட கடன் தீர்க்க வழிகாண முடியவில்லை அவனால். செல்வாக்கு இருந்தாலும், சேனை பலம் பெற்றிருந்தாலும், செய்யக்கூடாத காரியத்தைச் செய்யத் துணிவு பெறுவது எளிதில் முடியாததாகும். யோக சிந்தனை, காளிங்கனின் ஒளிமிகுந்த சரீரத்தை ஓடாக்கி வந்தது. பெரும் புயல் ஒன்று நாட்டை உருக்குலைத்துப் போன போது வாங்கப்பட்ட கடன் தொகை, பரம்பரை பரம்பரையாகக் காளிங்கன் ஆண்ட சீமையை அடிமைப்படுத்தி வருவதை, தன்னுடைய காலத்தோடு ஒழித்துவிட வேண்டுமென்ற அவனது தணியாத ஆசை நாளடைவில், செத்துக்கொண்டே வந்தது. தீராத மனக் கவலையில் சிக்கித் தவிப்போர், உலகம் தன்னை அவமதிப்பதாக எண்ணுகிருர்கள்; சுற்றத்தார், சூழ்ந்திருப்போர், கூடக் கைவிட்டு விட்டதாகக் கருதி விடுகிருர்கள். காளிங்கனும் அப்படித்தான் நினைத்தான். அடிக்கடி ராஜகேசரியைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு எதிர்காலம் பற்றிப் பேச ஆரம்பித்தான்.

நஞ்சுண்டு இறந்துவிடக்கூட அவன் நினைத்ததுண்டு. நாடாளப் போகும் ராஜகேசரியின் மீதுள்ள பாசம், காளிங்கனின் சாவுப் பாதைக்கு வேலிபோட்டு வந்தது.

சாகத் துணிவது கோழைத்தனந்தான்; ஏனென்ருல் சாகத் தூண்டும் பெருஞ்சுமையை இதயத்தில் தாங்கிக்கொண்டு உயிரோடிருப்பது அவ்வளவு எளிதல்லவே! இளவட்டக் கல்லைத் தூக்கிப் பலம் பார்க்கும் வாலிபனுல், வெளிக்குத் தெரியாத சிறு கவலையைக்கூட இதயத்தில் மறைத்து வைக்க முடிவதில்லை. வீரத்திற்கும் மானத்திற்கும் தொடர்பு உண்டு என்கிருர்கள். மானத்திற்கு ஆபத்து என்கிறபோது மட்டுமா வீரம் தலை காட்டுகிறது! வீரம் எப்போதுமே புகழ்ப்பசி கொண்டதுதான்! வலுச் சண்டைக்கு வரும்; வம்புக்கு வித்தூன்றும்! எதிரியின் பலத்தை எடை போட்டுப் பார்க்கும் தன்மையே வீரத்திடம் இல்லை!

★

"கேசரி, எனக்குப் பிறகு, உனக்கு என்னென்ன

தொல்லேகள் வரப்போகின்றனவோ என்றுதான் கவலேப்படுகிறேன் மகனே! ராஜ்ய பாரத்தைத் தாங்க முடியுமா என்ற பயம்தான் எனக்கு!”

“பரிபாலனஞ் செய்யத் தெரியாதவர்களெல்லாம் பக்குவமாக நடந்துகொள்ளும்போது நான் மட்டும் ஏன் கவலேப்படவேண்டும் பிதாவே! நாடு இருக்கிறது; நாட்டு மக்களிருக்கிருர்கள்!”

“மக்கள் இருக்கிருர்கள்; மாபெரும் படை இருக்கிறது; மனேதிடம் உண்டா உனக்கு என்கிருன். உன் தந்தை கீர்த்தி பெற்றவன்தான்; முடியவில்லேயே பல்லவத்தாருக்குப்பட்ட கடனேத் தீர்க்க! மக்களின் வாழ்வுக்குத்தான் நமது மூதாதையர் விரயமாக்கி இருக்கிருர்கள். அதைச் செலுத்த இன்னும் கூடவில்லேயே!”—என்று காளிங்கனும் கேசரியும் தனித்திருந்து பேசிக் கொண்டிருக்கையில் சேவகன் ஒருவன் உள் நுழைந்தான்.

“என்ன!”

“பல்லவ தேசத்திலிருந்து ஓலே வந்திருக்கிறது. இதோ!”

காளிங்கருக்கு,

பல்லவ தேசத்துக் கருவூலத்திற்குக் கட்டவேண்டிய கடன் தொகையை இதுவரை நீங்கள் கட்டியபாடில்லே. ஆண்டாண்டுக் காலமாக இந்த மனஸ்தாபம் நம்மிரு தேசங்களுக்கிடையே இடைவெளி ஏற்படுத்தி வருவதை நான் விரும்பவில்லே. என்னுடைய மகள் **கோதை நாச்சியரைக்** கொங்கு நாட்டுக்கு எதிர்கால ராணியாக்க ஆசை! ஆம், ராஜகேசரிக்குத் துணேவியாக்கி வைத்து நமது உறவை வளர்த்துக்கொள்ள விரும்புகிறேன். சென்றகால நிகழ்ச்சிகள், செலுத்தவேண்டிய கடன், இதுபற்றி இனிப் பேச்சில்லே. உங்கள் ஒப்புதலே எதிர்பார்க்கிறேன்.

இங்ஙனம்,
அபராஜிதன்.

முடங்கலேப் படித்து முடித்தான் காளிங்கன். கோதை நாச்சியார் பெண்ணழகிதான் என்ருலும், கொடுக்கவேண்டிய கடனுக்காகத் திருமணமா?—என்று காளிங்கனின் சுயமரியாதை நெஞ்சு எண்ணியது. ‘கோழைக்குப் பலமுறை மரணம், வீரனுக்கு ஒரு முறைதான் மரணம்’ என்று கூறி, இயலாதென அறிவித்து விட்டான் காளிங்கன். அமைச்சர்கள் குலே நடுக்கமுற்றனர். பல்லவர் பகை கூடாது எனப் பயம் காட்டினுர்கள் மன்னர்களின் நண்பர்கள்.

“தாழ்பணிந்து பேரம் பேசி வாழ்வு நடத்துவதல்ல ராஜ காரியம். கொங்கு நாடு கீர்த்தியோடு அழியட்டும்” என்று கர்ஜித்தான் காளிங்கன். ஒரு கிழமை தாண்டியது. மறு ஓலே வந்தது பல்லவ தேசத்திலிருந்து. ஓலேயா அது! போருக்கு அறை கூவல்! **சாரமதி** என்ற இடத்தில் அமர்க்களம் அமைத்துவிட்டதாக அறிவித்துவிட்டான் அபராஜிதன்.

படை கிளம்பியது. போர்ப் பாடல் வான்முட்ட ஆர்ப்பரித்துக் கிளம்பியது கொங்குச் சேனே. சாரமதி காலேச் செவ்வானமாயிற்று. கோரம்! கோரம்! இரு படையும் மனித வேட்டையாடின. கால்கள் அற்றன! கரங்கள் இற்றன! சிரம் உருண்டது! உரம் பிளந்தது! மதங்கொண்டு பிளிறும் யானேகள் தளர்வுற்று வேல்பட்டுச் சாய்ந்தன. பின்னுறத் தேங்கிய குதிரைப்படை, பின்காலற்றுக் கவிழ்ந்தன. வேலெறிந்த வீரர்கள் தலே துமிந்து வீழ்ந்தனர். கை வேலேக் களிற்ருேடு போக்கியவர்கள் மெய் வேல் பறித்து வெட்கித்தனர்! ஆனுல் முடிவு? பரிதாபம்! காளிங்கர் படை சிதறடிக்கப்பட்டது. பிணத் தோட்டத்திற்கு ரத்த நீர் பாய்ச்சி மகிழ்ந்தது பல்லவச் சேனே. சென்றேன் வென்றேன், என வெற்றிப் பண்பாடி விழா நடத்தினுன் அபராஜிதன் பல்லவ நாட்டில்.

கொங்கு நாட்டைத் தோற்கடித்த மகிழ்ச்சிகூட அதிகமில்லே அவனுக்கு! கோதை நாச்சியாருக்கு ராஜ கேசரி கிடைத்து விட்டான் என்பதே அவனேப் போதைக்குள்ளாக்கியது. ஆனுல் அதையொட்டி ஒரு சோகச் சேதி காத்துக் கிடந்தது என்பதை அவன் மறுநாள்தான் அறிந்துகொண்டான்; அவன் எதிர்பார்க்கவில்லே, எண்ணி மகிழ்ந்த மருமகன் போரிலே செத்துவிட்டான் என்ற துக்கச் சேதி கிடைக்குமென்று! பல்லவ நாட்டு ஒற்றனுல் அபராஜிதன் முன்பு சமர்ப்பிக்கப்பட்ட ராஜ கேசரியின் விலே பெற்ற ஆடைகளேச் சோதித்துப் பார்த்தான். சிறை வைக்கப்பட்டிருந்த கொங்கு நாட்டுக் கைதிகளிடம் காண்பித்து விசாரணே நடத்தினுன்.

“இளவரசர் உடை[illegible] இது” என்று கதறி அ[illegible]கள் கொங்கு நாட்டுப் [illegible]யினர். அபராஜிதன் கண்[illegible] நீர் துளிர்த்தது.

“கோதையின் வாழ்வு க[illegible]ற்று” என்று தானே சொல்லி[illegible] கொண்டு தரையிலே சாய்[illegible] தான். மறுபடியும் அவன் எழு[illegible] திருக்கவே இல்லே. அவன் சரித்திரம் முடிந்தது.

வாரிசுக்கொரு மகளாக இருந்த கோதை, வாழ்நாள் முழுதும் ‘வாழாவெட்டி’ யாகவே இருப்பாள் என்று யாரும் எதிர்பார்க்கவில்லே. அடைந்தால் ராஜகேசரி, இன்றேல் கன்னியா[illegible] குமரி என்று காலத்தைக் கடத்தி[illegible]னுள். அவளுக்குப் பிறகு அந்த அரளிக் கோட்டை சூன்யமாகிவிட்டது. அவளுடைய அந்திய காலத்தில் சொந்தப் படையை ஏவிவிட்டே அந்தக் கோட்டையை நிர்மூலமாக்கச் செய்[illegible] விட்டாள்.

★

இதுதான் எனக்குக் கிடைத்த சிறு குறிப்பு. இன்னும் என் மனதைவிட்டு அந்தக் கோட்டை அகலவில்லே—கண்ணில் பட்[illegible] பொருள்களெல்லாம் நெஞ்[illegible] குடைந்துகொண்டே இருக்கின்றன.

—தென்னரசு

★

பிறப்பு

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களது மகன் திரு. மன்னர் மன்னனின் துணேவியார் சாவித்திரி 25-5-56 அன்று ஆண்மகவொன்றுக்குத் தாயானுர்கள்.

“பகுத்தறிவு”
(வார இதழ்)

“பகுத்தறிவு” திங்கள் இதழை வார இதழாக வெளியிட முடிவு செய்யப்பட்டு அதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதால் ஜூன் மாத இதழ் நிறுத்தப்பட்டுள்ளது.

“பகுத்தறிவு” வார இதழ், ஜூலே முதல் வாரம் தொடங்கி வெள்ளிதோறும் சேலத்தினின்றும் வெளிவரும் என்பதை அன்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்வதோடு, பட்டியல் பாக்கி வைத்துள்ள விற்பனேயாளர்கள் கருணேகூர்ந்து தொகையினே அனுப்பிவைக்குமாறு ‘வேண்டுகிறேன்’ என பகுத்தறிவு ஆசிரியர் ப. கண்ணன் தெரிவிக்கிருர்.

சோனல்

முகப்பரு, வேனல்கட்டி, சேத்துப்புண், பித்தவெடிப்பு, தீப்பட்டபுண், சொரிசிறங்கு, கக்கூஸ் பத்து, வெட்டுக்காயம் முதலிய சருமவியாதிகளேக் குணப்படுத்துவதில் நிகரற்றது.

எங்கும் கிடைக்கும்.

ஆரன்ஸ்
கிரைப் டில் வாட்டர்

குழந்தைகளுக்கு உண்டாகும் வயிற்றுவலி, வயிற்ருேட்டம், மாந்தம் முதலிய அஜீரணக் கோளாறுகளேப் போக்கி ஆரோக்கியத்தை உண்டாக்கும்.

எங்கும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள்:

தீ பாரத் டிரக் ஹவுஸ்,
மதுரை.

"போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுபுவர் தூற்றட்டும் ; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதோரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன் : அஞ்சேன் !".

எண்ணம்

லர் 3 || 23—6—56 || இதழ் 1

மூன்றும் ஆண்டு

தென்றலுக்கு இது மூன்றும் ஆண்டு. இரண்டு ஆண்டுகள் தவழ்ந்தும் தாவியும் மூன்றுவது ஆண்டின் முதற்கட்டிலே வந்து நிற்கிறது தென்றல். தென்றல் நடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்க்கும் போது நமக்கு மகிழ்ச்சி மேலிடுகிறது. இனி நடக்கப்போகும் பாதைக்கு உணர்ச்சி, உள்ளத்தைத் தயார் செய்கிறது.

கடந்த இரண்டாண்டுகளில் தென்றலுக்குக் கிடைத்த வரவேற்பை எண்ணும் போது உண்மையிலேயே என் மனம் பூரிக்கிறது படித்தவர்கள், பாமர மக்கள் அனைவரும் தென்றலிடத்து அன்பு செலுத்துகிறார்கள். கல்லூரி மாணவர்கள் தென்றலைப் பள்ளிப் பாடங்களில் ஒன்றாகக் கருதுகிறார்கள். அறிஞர் பெருமக்கள் மனங்கனிந்து பாராட்டுகிறார்கள். புலவர்கள் கரத்திலெல்லாம் தென்றல் நின்று நிலவுகிறது பொதுவாகத் தென்றல் எல்லோருடைய உள்ளத்திலும் இடம்பெற்றிருக்கிறது.

பொறுமைப் பெருமூச்சையும், புல்லர்களின் நச்சுப் பார்வையையும் தகரக்குவளைகளின் தாக்குதலையும் ஒட்டை உடைசல்களின் உறுமலையும் அலட்சியப் புன்னகையோடு கடந்து, வெற்றிப் படிக்கட்டில் ஏறிநிற்கிறது. பத்திரிகைத் தொழிலின் பரிதாப நிலையை எண்ணினால் இந்த வெற்றியே இமாலய வெற்றியாகத் தெரிகிறது.

தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் ஒருமுறை குறிப்பிட்டதுபோல, தென்றலை ஆசிரியரின் வருமானம் தான் காப்பாற்றுகிறதே தவிர, ஆசிரியரைத் தென்றல் வருமானம் காப்பாற்றவில்லை. காரணம், தென்றலை வருமானத்துக்கு உரிய ஒரு தொழிலாக நான் நடத்தவில்லை. எனக்குத் தெரிந்த சிலபல கருத்துக்களை முறையாக அரங்கேற்றி வைப்பதற்கு ஒரு கருவியாகத்தான் தென்றலைப் பயன்படுத்துகிறேன். அதற்கு ஒத்துழைக்கும் நண்பர்களையும் தென்றலின் நண்பர்களாகக் கொண்டுள்ளேன். தூய தமிழ்ப் பண்பு தவழும் இலக்கியங்கள்கூட, பார்ப்பனர்களின் சொத்துத்தான் என்றிருந்த நிலைமையைத் தென்றல் மாற்றிவைத்தது. கழகத்தில் ஒரு பகுதித் தோழர்களிடையே அரசியலோடு இலக்கிய விறு விறுப்பையும் கலந்து ஊட்டிய பெருமையில் தென்றலுக்குப் பெரும் பங்குண்டு. மறைந்து வந்த வெண்பா இலக்கணத்தை மறுபடியும் தூக்கி நிறுத்தியது தென்றல் என்றால் மிகையாகாது. குடத்துள் விளக்கென இருந்த பல இளங்கவிஞர்களை நாட்டுக்கு அறிமுகப்படுத்தி வைத்த பெருமை தென்றலைச் சாரும். இலக்கியப் போட்டி வைத்து ஆயிரம் ரூபாய்கள் பரிசுவழங்கியது தென்றல். இலக்கியத் துறையிலே பிரச்சினைகள் எழுந்தபோது தன் கட்சியை ஆதாரங்களோடு எடுத்துரைத்து வெற்றிபெற்றிருக்கிறது தென்றல். இப்படிப் பலப்பல சிறப்பியல் புகளைத் தன்னகத்தே கொண்டு வளர்ந்து வரும் தென்றலை மேலும் ஊக்குவிப்பது நண்பர்கள் கடமையாகும். நிற்க.

ஏழெட்டாண்டுக் காலம் பத்திரிகைத் துறையில் எனக்கு அனுபவமுண்டு. இன்றைக்குப் பிரபலமாக விளங்குகிற ஒரு பார்ப்பன வாரப் பத்திரிகை தளர்நடை போட்ட அந்தக் காலத்திலே, தலைதூக்கி நின்ற ஒரு பத்திரிகையின் ஆசிரியராக நான் பணிபுரிந்திருக்கிறேன். இந்தச் சுயபுராணத்தை இங்கே அவிழ்த்து வைப்பதன் நோக்கம், பத்திரிகை உலகில் நான் புதிதாகக் கிளம்பிய நட்சத்திரமல்ல என்பதைத் தெளிவுபடுத்துவதுதான்.

தென்றலின் வளர்ச்சியையும் அதன்மூலம் எனக்குக் கிடைக்கும் மகிழ்ச்சியையும் அசூயையோடு பார்ப்பவர்கள் இதைப் புரிந்துகொள்ள வேண்டும். அரசியல் துறையிலே தென்றல் அதிகப் பணிபுரியவில்லை, என்பதாக ஒரு குற்றத்தைச் சில நண்பர்கள் சுமத்துகிறார்கள். இயக்கத்தின் எல்லாப் பத்திரிகைகளும் ஒரே மாதிரி இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் ஒரு துறையை தென்றல் பிரித்து எடுத்துக்கொண்டது. என்றாலும் அரசியல் துறையில் தென்றல் இனிச் சற்று அதிக ஈடுபாடு காட்டும். ஆனாலும் இலக்கியமே அதன் முதற் குறிக்கோளாக இருக்கும். சென்ற இரண்டாண்டுக் காலத்தில் தென்றலோடு ஒத்துழைத்த எல்லா நண்பர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இனியும் அவர்களது ஒத்துழைப்பு தொடர்ந்து கிடைக்குமென்று எதிர்பார்க்கிறேன். வணக்கம்.

—கண்ணதாசன்.

அறம் வென்றது !

ஆளும் வர்க்கத்தினர் நம் இயக்கத்தை பலமுறை சோதித்துப் பார்த்திருக்கிறார்கள். அத்தனை முறையும் அவர்கள் பெற்றது தோல்விதான். அறிஞர் அண்ணா அவர்களின் ஆரியமாயை வழக்கிலிருந்து தூத்துக்குடி வழக்குவரை ஆளும் வர்க்கம் தோல்வியுற்றிருக்கிறது. நம்முடைய ஆற்றலையும் - நம்முடைய நேர்மையையும் அறியாமல்தான் அவர்கள் நம்மீது வழக்குத் தொடர்கிறார்கள்; தொடர்ந்து தோல்வியுறுகிறார்கள் !

பிப் 20 அன்று கள்ளக்குறிச்சியில் நமது தோழர்கள்மீது அரசியலார் பதிவு செய்த வழக்கு அரசியலாருக்குப் பாதகமாகவே அமைந்துவிட்டிருக்கிறது. கடந்த பிப்ரவரியில் நடைபெற்ற பொதுவேலை நிறுத்தத்தில், கள்ளக்குறிச்சியில் நம் இயக்கத் தோழர்கள்மீது கலகமூட்டல், கொள்ளையிடல்,போன்ற குற்றங்களைச் சாட்டி வழக்குத் தொடுத்தனர் அரசியலார்.

வழக்குப் பலமுறை ஒத்திவைக்கப்பட்டன. இறுதியாக 14-6-56 அன்று நடைபெற்ற விசாரணையின்போது, நீதிபதியவர்கள் 'தோழர்கள் குற்றவாளிகளல்ல' எனத் தீர்ப்பளித்தார். வழக்கின் முடிவில் நம்மவரே வெற்றிபெற்றனர். நேர்மை வெற்றிபெற்றது, நீதி வெற்றி பெற்றது; இனிமேலாவது அரசியலாருக்குப் புத்தி வரும் என்று எதிர்பார்க்கிறோம்.

வெண்பாப் போட்டி 30.

(இறுதிப் போட்டி)

ஈற்றடி : வட்டநிலாச் சுட்ட வடு !

முடிவு தேதி 7-7-56

முகவரி:— வெண்பாப் போட்டி,
தென்றல்,
சென்னை-6

நல்லதோர் சமுதாயம் காண நாளெல்லாம் பாடுபடும் நரைமூதாட்டி.
—வள்ளுவர் நகரில் ராமாமிர்தத்தம்மையார்.

தேர்தல் கமிட்டி-தேவாலயப் பட்டர்

அன்புள்ள நண்ப,

நம்மிருவருக்கிடையே, நான்காண்டுகள் நெருப்பாறுபோல ஓடி ஓய்ந்த பிறகு, நீய்ந்துபோன கருமணலில் பாதம் பதித்து ஓடிவந்து, சந்திக்கிறோம். துன்புறுத்தப்படும் நிரபராதிகளிலும், துடித்தெழுவோரைக் காட்டிலும், தூங்குமூஞ்சிபோல் இருப்போர்தான் பூரண வெற்றி பெறுகிறார்கள் என்ற இதயப்பிடிப்பில் நான் இருந்ததால், உன்னைப்பற்றி அக்கறை கொள்ளாதிருந்தேன். நான்காண்டுகள் ஓடி மறைந்த பிறகு, என் விட்டு முற்றத்தில் வைத்து வளர்க்கப்பட்ட மாங்கன்று சுற்றியிருந்த சிமிண்ட் தரையைப் பிளந்து, வளர்ந்து பூப்பூத்த பிறகு, 'தவறு செய்துவிட்டேன் நண்பா, தவறு செய்துவிட்டேன்' என்று, மெய்வருந்திக் கடிதம் எழுதியிருக்கிறாய். உன்னுடைய கடிதத்தைப் பார்த்த பிறகு,காலம் ஒரு உண்மை விளம்பி என்று தெரிந்துகொள்ளாமல் இன்னும் சிலர் கீர்த்தி, கித்தாப்பு, என்ற அத்தியாயங்களைக் கொண்ட புகழ்ப் புராணங்களையே வாசித்துக்கொண்டிருக்கிறார்களே என்று நானகச் சிரித்துக்கொண்டேன். உனக்குத்தான் தெரியுமே காங்கிரஸ் கட்சியைப் பற்றி! மிடுக்கோடு வளர்ந்தவர்கள்; மின்னலிட்டு வந்தவர்கள்; எதிர்ப்பாருண்டோ என நாவறு காட்டுக் கௌதாரிபோல் கொக்கரித்தவர்கள்;மண்ணுளும் தகுதி எந்நாளும் எங்களுக்கே-என்று செருமிக் கொண்டு பேசியவர்கள்- இன்று எந்நிலைக்கு வந்திருக்கிறார்கள்? இரண்டு மூன்றுநாள் செய்தித்தாள்களைப் புரட்டிப் பார்! கழகம் வளர்ந்திருக்கிறது என்ற மகிழ்ச்சி ஒருபக்கம், கதர்ச்சட்டைக் கொடுமையும் வளர்கிறதே என்ற மனவேதனை மறுபக்கம். டில்லித் தலைநகரம் தேர்தல் வேலைகளில் இறங்கிவிட்டது. முன்கோபி மந்திரிராஜா (மந்திரியாக இருந்துகொண்டு ராஜாபோல ஆதிக்கம் புரிபவர்) கண்ணும் கருத்துமாக இருந்து காரியமாற்றத் தொடங்கிவிட்டார். அது பற்றியெல்லாம் நமக்குக் கவலையில்லை. ருசிகண்ட அவர் நாக்குத் தட்டிக்கொள்ளட்டும். ஆனால் எதிர்க்கட்சிகளை எதிலும் கலந்துகொள்ளத் தகுதியற்றவர்கள் என்று அரசாங்க உத்தரவு, உளுத்துப்போன தேர்தல் சட்டங்களின் பெயரால்,காங்கிரசார் தள்ளிவைக்க நினைப்பதைத்தான் நம்மால் தாங்க முடியவில்லை. என்ன இருந்தாலும் ஜவகர் ஜவகர்தான் என்பாயே! அந்த ஜவகரும் சேர்ந்து சொல்லும் (அ)நீதியைக் கேள்! விட்டு முகப்பில், வெற்றிமுகத்துடன்,வெள்ளிச் சட்டம் பிடித்து மாட்டி வைத்திருக்கிறயே, அந்தப் பண்டித நேருவும் கூட்டாக இருந்து செய்யும் 'புனித' கைங்கரியத்தைப் பார்! காங்கிரஸ் கட்சிக்கு எதிராகக் கூட்டணி ஏற்படுத்தினால், அது அரசியல் கட்சி என்று ஏற்றுக்கொள்ளப்படமாட்டாதாம்! தேர்தல் கமிட்டி திட்டவட்டமாக அறிவித்திருக்கிறது. நாட்டின் சுபிட்சமே எங்களது ஜீவலட்சியம் என்று'ஆராரோ'ப் பாடும்பண்டிதர் அரசாங்கத்தின் முடிவு இது. 'தேர்தலிலே நின்று பார்க்கட்டும்' என்று அறைகூவல் விடுத்தார்கள்; அவர்கள்தான் முடிவு செய்திருக்கிறார்கள், கூட்டணிக்கட்சி ஒரு அரசியல் கட்சியாகக் கருதப்படமாட்டாது என்று. காங்கிரசை முறியடிக்கப் பெரியதொரு எதிர்ப்பு முன்னணி உண்டாகக் கூடாது; அவ்வாறு உருப்பெற்றாலும் அது ஒரு கட்சியாக மதிக்கப்படமாட்டாது-உலகம் தன்னோடு அழிந்துபடவேண்டும் என்று எண்ணுகிற எதேச்சாதிகாரியின் மூளையில் 'ஜனித்த'-திட்டம் இது என்பதைப் படித்தவர்கள் புரிந்து கொள்வார்கள்.

மக்கள் நன்றி கெட்டவர்கள்; உணர்ச்சி வயப்பட்டுவிடக்கூடியவர்கள்; இன்று 'இல்லை' என்பார்கள்; நாளை'உண்டு'என்பார்கள்; அப்படிப்பட்ட மக்கள் மன்றத்திடம் பொறுப்பை ஒப்படைத்து, அவர்களிடமிருந்து ஒரு நல்ல திட்டத்தை எதிர்பார்க்க முடியாது. அவர்களையெல்லாம் மிரட்டக்கூடிய ஒரு அதிகாரம், ஒரு சக்தி ஒருவனிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்; என்ற விஷக் கொள்கையை இத்தாலி நாட்டில் வித்திட்ட மாக்யவில்லியின் சித்தாந்தத்திற்கும் இன்றைய காங்கிரஸ் சித்தாந்தத்திற்கும் மாறுபாடு காணமுடியாத வகையில் இருந்து வருகிறது.

காங்கிரஸ் ஒரு பலம் வாய்ந்த கட்சி; உலகெங்கும் புகழ் நாட்டிய கட்சி; சரியாகவோ தவறாகவோ வெள்ளையரை விரட்டிய கட்சிஎன்று பெயர் பெற்றுவிட்ட கட்சி-அந்தக் கட்சியைஆட்சியைவிட்டுத்துரத்தித் தானாக வேண்டும் என்கிற நிலைக்கு மக்களே வந்துவிட்ட பிறகு, அவர்கள் எந்த வழியை மேற்கொள்ளுவது? ஊரார் கழனிகளை மேய்ந்து கொழுத்துத் திரியும் கோயில் காளையை அடக்க நினைக்கும் கிராமத்து மக்கள் என்ன செய்வார்கள்? கோயில் காளை என்ற அச்சம் ஒருபக்கம்; கழனி பாழாகிறதே என்ற கவலை ஒருபக்கம். வாலிபர் பலர் கூடி அந்தக் காளையைக் கோட்டைக்குள் போட்டு அடைப்பார்கள்; அல்லது, மாட்டை ஊரைவிட்டே துரத்துவார்கள். ஏழைகள் - எதற்கும் அஞ்சும் சுபாவம் கொண்டோர் வேறு என்ன செய்யமுடியும் அவர்களால்! ஆனால் கோயில்பட்டர், கழனி அழிவதைப் பற்றிக் கவலையில்லை. எல்லோரும் கூடித்தானே மாட்டைப் பிடித்துவிட்டீர்கள்; தனித்தனியாக வந்து பாருங்கள். குடலை உருவிக் கழுத்தில் போட்டுக் கொள்ளாதா எங்கள் காளை-என்று கூவியழைக்கிறார். இந்திய சர்க்காரின் தேர்தல் கமிட்டி அந்தத் தேவாலயப் பட்டரைப் போலத்தான் முடிவு தெரிவித்திருக்கிறது.

ஜனநாயக நாட்டில், அரக்கத்தனம் மிகுந்த ஒரு கட்சியை முறியடிக்க, கூட்டணி சேர்ப்பது தானே நாகரீகமான முறை. அது கூடாது; அந்த முறை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்றால், கோயில்மாடு பயிரை அழிக்கத்தான் செய்யும்; கேட்பவர்கள் பெருகக்கூடாது என்று சொல்லும் கோயில்பட்டருக்கும் இவர்களுக்கும் என்ன வித்தியாசம்?

காளையைப் பிடிக்காதே-பட்டர்.

காங்கிரசை எதிர்க்காதே - தேர்தல் கமிட்டி.

இப்படி ஒரு முடிவை எடுத்து வைத்துக்கொண்டு, ஒருதலைப்பட்சமாக நடக்கத் துணிந்த நேருதான், "காங்கிரஸ் தோற்பதைப் பற்றிக் கவலையில்லை; நல்லவர்கள் நிர்வாகத்திற்கு வரவேண்டும்" என்று பசப்புகிறார். நல்ல காங்கிரஸ்காரர்களை—படித்த காங்கிரஸ்காரர்களை நிறுத்தி வைத்து, அவர்களை வெற்றிபெறச் செய்து காங்கிரசைப் புதுப்பிப்போம் என்ற நல்லெண்ணம் நேருவுக்கே வரவில்லை என்று எண்ணுகிறபோதுதான், அவரே, காலம் ஒரு உண்மை விளம்பி என்று புரிந்துகொள்ளாமல் சுயபுராணம் வாசிக்கிறாரே என்று விசனப்பட வேண்டியிருக்கிறது. நான்காண்டுகளுக்குப் பிறகு நீ புரிந்துகொண்டாய். நீ நம்பும் நேரு,உன் குடும்பத்தார் வணங்கும் நேரு, இன்னும் புரிந்துகொள்ளவில்லை.

நண்ப, நமது நட்பு,புது ஒளிவீசத் தொடங்கியிருப்பதை நான் மனதார வரவேற்கிறேன். ஊருக்கு வரும்போது ஓடோடி வந்து சந்திக்கிறேன். உன் கொள்கை உன் பக்கம்; என் கொள்கை என்பக்கம். ஆனால் நட்பு வளரட்டும்; ஒற்றுமை பெருகட்டும்.

—முடிமன்னன்

★ ★ ★

வாங்க அத்தான்!

★ துரை. மாணிக்கம் ★

அத்தான் !என் உள்ளத்தில் பொங்கும் ஆசை
அத்தனையும் உள்ளடக்கிக் கூறு கின்றேன்
தித்திக்கும் ஒருசெய்தி ! நீங்கள் தந்த
தெவிட்டாத இன்பத்தின் விளைவே ! ஆமாம்;
முத்துக்கும் ஒளியில்லை என்னு மாறு
மொய்விழிகள் ! சிறியநுதல் ! இன்ப வெள்ளம் !
ஒத்திருக்கும் உங்கள்உரு; ஆமாம் அத்தான் !
உணர்ந்திரா யாரென்றே ? நம்மின் செல்வம்.

போங்கத்தான் ! உங்கட்குப் புரிய வில்லை !
பிறந்துவிட்டான் உங்கள்மகன் ! அவனைக் காண
வாங்கத்தான்; வார்த்தெடுத்த தங்கப் பாவை !
வைத்தகண் வாங்காமல் எனைப்பார்ப் பீரே;
நீங்கத்தான் விடுவீரா ? அதுபோல் என்னை
நீலவிழி எடுக்காமல் நோக்கு கின்றான்
ஏங்கத்தான் ! அசையாமல் இருக்கின் றீர்கள் ?
எடுத்தடியை வையுங்கள் ! இருப்பீர் இங்கே !

பூத்திருக்கும் அழகுமலர் தன்மேல் மொய்க்கும்,
புதுவிழிகள் ! எனக்காக, அத்தான் நீங்கள்,
காத்திருக்கும் வகைபோலக் கோவை வாயைக்
காட்டியவா றெப்போதும் துடித்து நிற்பான் !
ஆர்த்திருக்கும் இருகையும், காலும், வாயும் !
அப்படியே உங்களைத்தான் ஒத்தி ருக்கும்,
பார்த்திருக்கும் போதெல்லாம் உங்கள் எண்ணம்,
பறந்துவிடும் ! ஆனாலும் அண்டும் மீண்டும் !

இன்னொன்று கேளுங்கள் அத்தான் ! என்னை
இடையிடையே மறந்தபடி அமைதி பூண்டே
இன்னொன்றைத் தேடுகின்றான் ! நேற்றே அன்தாய்
இதைச்சொன்னாள் ! உங்களைத்தான் தேடு வானும் !
'தின்'னென்று கன்னத்தைக் கனிவாய் தன்னைத்
தருவானும் உங்கட்கே ! சொன்னான் என்பால் !
பின்னென்ன, வாருங்கள் அத்தான்; உங்கள்
பையனையே கொஞ்சுங்கள்; வேண்டாம் என்னை !

எனக்குத்தான் உரிமைஎன்பேன்; நேற்று வந்த
இன்னொருவன் தனக்குரிமை என்பான்; ஆனால்
சினக்கத்தான் துணிவேனோ ? பால்ம ணக்கும்
சிறுவாயை அழகுபெறக் கூட்டி, என்றும்
இனிக்கின்ற தமிழ்மொழியால் "அப்பா" என்றே
இயம்புகையில், அத்தான்நான் மகிழ்ந்து போவேன்;
தனிக்குன்றச் செந்தோளைக் காட்டு தற்குத்
தடம்பார்த்துக் கிடக்கின்றேன்; இங்ஙன் உள்ளே !

★ ★

★ கோஷ்டி சேர்க்கிறார்கள்! ★

ஒரு செட்டியார் நான்கு பிள்ளைகளை விட்டுவிட்டு இறந்துபோனார். குமாரர்கள் எல்லோருக்கும் வயது ஆகி விவாகமாகி நான்கு மனைவிமார்களும் வீட்டுக்கு வந்து எல்லோரும் ஒரே குடும்பமாக வாழ்ந்துவந்தார்கள்.

நான்கு மனைவிகளுக்குள் சண்டையும் சச்சரவும் அடிக்கடி உண்டாகும். சிறு விஷயங்களைப் பற்றி என்று புருஷன்மார் அவற்றைக் கவனிக்கவில்லை. கவனித்தாலும் மனைவிகள் சமாதானமடைய மாட்டார்கள். தினமும் ஏதாவது ஒரு சச்சரவு இருந்துகொண்டேயிருக்கும் இரவில் யாருக்குமே சரியாக உறக்கமில்லை.

இரவும் பகலும் அந்த வீட்டில் நடக்கும் சச்சரவு பக்கத்து வீட்டார்களுக்கெல்லாம் கஷ்டமாக இருந்தது.

தகப்பனார் ரொம்ப சொத்து வைத்துவிட்டுப் போயிருந்தார். பணமும் நகைகளும் பெட்டிகளில் போட்டுப் பத்திரமாக ஒரு அறையில் வைத்திருந்தார்கள். இதன் மேல் ஒரு கன்னக்கோல் திருடனுக்கு ரொம்ப நாளாகக் கண். ஆனால் அவனுக்குச் சரியான சந்தர்ப்பம் சிக்கவில்லை. இரவில் அந்த வீட்டில் யாரேனும் இருவர் மூவர் சண்டை போட்டுக்கொண்டேயிருந்தபடியால் எல்லோரும் விழித்தே இருந்தார்கள். திருடனுக்கு அவகாசம் ஏற்படவில்லை.

மூத்த சகோதரன் எவ்வளவோ சொல்லிப்பார்த்தும் தம்பிகள் கேட்கவில்லை.

"நாம் பிரிந்து போனால்தான் சவுகரியம். இந்தப் பெண்கள் தினமும் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். பிரிந்து போனோமானால் இது அடங்கும்' என்று வாதாடிக் கொண்டு வந்தார்கள்.

இதற்கு இன்னது செய்வது என்று தெரியாமல் மூத்தவன் தள்ளிப் போட்டுக்கொண்டே வந்தான்.

பிறகு ஒரு நாள் அவன் மனைவி "இந்தச் சள்ளை தீர்ந்தால் நல்லது. பிரித்துக் கொடுத்துவிடுங்கள்" என்று சொன்னாள். அவனும் அதுவே சரியென்று வருத்தத்துடன் தீர்மானித்தான்.

சொத்துக்களைப் பிரித்துக் கொண்டு தொட்டி வீட்டையும் நான்காகப் பிரித்து, செங்கல் சுவர்கள் எழுப்பிவிட்டு வெவ்வேறாகச் சமையலும் குடித்தனமும் செய்ய ஆரம்பித்தார்கள்.

பக்கத்து விட்டுக்காரர்கள் "அப்பாடா! நிம்மதியாயிற்று. இனி தூங்குவோம். இரவில் இனி இரைச்சல் இல்லை!" என்று சந்தோஷப் பட்டார்கள்.



ஆரியமும் திராவிடமும் கலந்துவிட்டதாம்!

★

ஒரு வாரம் எல்லோரும் சுகமாக கப்சிப் என்று வாழ்ந்தார்கள்.

திருடன் இதுதான் சமயம் என்று தீர்மானித்தான்.

அமாவாசை கழிந்து இரண்டாம் நாள்—ஞாயிற்றுக் கிழமை—திருடர்களுக்கு அது நல்ல திதியும் வாரமும்—அந்த இரவு இரண்டு மணிக்குச் சரியாகத் திருடன் கன்னம் வைத்தான். எல்லோரும் நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தார்கள். ஒரு கஷ்டமும் தடையுமில்லாமல் திருடன் புதிதாகப் போட்டிருந்த சுவர்களில் செங்கல் பெயர்த்து எடுத்துவிட்டு எல்லோருடைய அறைகளிலும் ஒன்றன்பின் ஒன்றாகப் பிரவேசித்தான். கதவுகளை உள்ளிருந்து திறந்துவிட்டுப் பெட்டிகளைத் தூக்கித் தூக்கி வெளியே இருந்த தன் கூட்டாளிகளிடம் கொடுத்துவிட்டுப் பணம் நகைகள் எல்லாவற்றையும் வெளியேற்றிவிட்டான். காரியமெல்லாம் முடிந்தபின் மூத்தவனுடைய சமையலறையில் பெரிய திருடன் புகுந்து அங்கிருந்த சோறும் ஊறுகாயும் எடுத்து வயிறு நிறையச் சாப்பிட்டு விட்டுச் சத்தம் செய்யாமல் போய் விட்டான்.

காலையில் எழுந்து பார்த்தார்கள். "ஐயோ!" என்று நான்கு மனைவிகளும் கதறினார்கள்.

ஊராருக்குக் கொஞ்சம் சந்தோஷமே. இந்தச் செட்டிமார்களின் செல்வத்தைப் பார்த்து அவர்களுக்கு வெகு நாட்களாக ஓரளவு பொறுமையாக இருந்தது.

மகிழ்ச்சி யடைந்தாலும் அதைக் காட்டிக்கொள்ளாமல் அனுதாபப் பேச்சுப் பேசினார்கள்.

"ஒன்றுபட்டாலுண்டு வாழ்வே—
நம்மில்
சண்டைகள் எத்தனையிருந்தாலும்
ஒன்றுபட்டாலுண்டு வாழ்வே—
நம்மில்
பிரிவினை செய்துகொண்டால்
பின்னனைவர்க்கும் கேடே
அனைவர்க்கும் கேடே"

என்று ஊர்க்குழந்தைகள் பாரதி பாட்டை மாற்றிப் பாடினார்கள்.

ஒரு காக்கை வீட்டுக்குமேல் உட்கார்ந்துகொண்டு, 'தெரிந்ததா? தெரிந்ததா?' என்று கத்திக்கொண்டிருந்தது.

நான்கு மனைவிகளும் ஒரு மூலையில் தலைமேல் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்து அழுது கொண்டிருந்தார்கள்.

★

இது ஒரு கதை. ஆமாம். இது கதைதான் நம்புங்கள்! ஐம்பதாண்டுக் காலமாக எழுத்துத் துறையில் கீர்த்தி பெற்றிருக்கும் ஆச்சாரியாரின் அரசியல் மூளையில் பிறந்த கற்பனைக் கதை இது. இது கதையல்ல; ஏதோ விஷமம் என்று யாரும் எண்ணிவிடுவார்களே என்று அஞ்சித்தான் தலைப்பையே 'பிரிவினைக் கதை' என்று போட்டிருக்கிறார். ஆச்சாரியார், கதை என்று நம்பச்சொல்லி நம்மை வலியுறுத்தினாலும், நாம் அதைக் கதை என்று கொள்ள மாட்டோம். அரிச்சுவடி படிக்கும் சிறுவர்களாக இருந்தாலும், கதையின் முடிவில் 'கிளைமாக்ஸ்' இல்லையே என்று கேட்கும் அளவிற்குச் சிறு கதை இலக்கியம் வளம் பெற்றிருக்கும் காலத்தில், ஆச்சாரியாரின் இந்த அவியலை நாம் எப்படிக் 'கதை' என்று கொள்வது? தான் நினைக்கும் காரியத்தை வெற்றிபெறச் செய்ய, ஆச்சாரியார் இயன்றதை இடைவிடாது செய்வதிலே மிக வல்லவர். அந்தஸ்து, கௌரவமெல்லாம் அவருக்கு ஆடிக் காற்று இலவம் பஞ்சு! வழக்கமான அந்தக் கொள்கையின் அடிப்படையிலேயே இந்தச் சிறு 'கதை'யையும் எழுதியிருக்கிறார். இப்படி ஒரு 'பிரமாதமான' கதையை ஆச்சாரியார் இப்போது எழுத வேண்டிய அவசியமென்ன? தமிழ், மலையாளம், கன்னடம் இவை தனித் தனியாகப் பிரியக்கூடாது என்பதையும், இந்த மாகாணங்கள் எல்லாம் இணைந்து தட்சிணப் பிரதேசமாக அமைய வேண்டும் என்பதையும்

— 11-ம் பக்கம் —



ஆண்டிகள் கூடி மடம் கட்டவா?

கொற்றவன் மாடக் கூடற்
கொடியினை விழியாய்க் கொண்டாள்
சற்றவன் கரங்கள் தோயத்
தளிருடல் அதிரக் கண்டாள்!
இற்றது நாணம்; காமம்
எடுத்தது வேகம்; வீரன்
பற்றிய படியே தானும்
பற்றினள் பற்றும் பற்றுல்!

தக்கவன் மார்பிற் கோதை
சாய்ந்தனள்; அவனும் தன்பாற்
சிக்கிய கிளியைக் கட்டிச்
சேர்த்தனன்; தென்றல், பாவம்!
புக்கிட மின்றி வாடும்
புறந்தொடப் போகும்! கூந்தல்
த்க்கிய மலரும் எள்ளத்
தலைகுனிந் தேகும் பெண்போல்!

வேரிலாக் கொடியிற் பூத்த்
வெண்மலர் முத்தம் மார்பில்
சீருலாக் கொள்ளும்; வேந்தன்
சித்தமும் உலாக்கொண் டேகும்!
காருலாங் குழலில் அன்னுன்
கையுலாக் கொள்ளும்! எங்கும்
பேருலாந் தமிழர் கோமான்
பெண்ணுலாம் மார்பன் ஆனுன்!

கனிகெடப் பழுத்த கோதை
கைப்பிடி யிடையில் ஆட
இனியன யாவும் கண்டு
இன்புறும் மறவர் வேந்தன்
பனிபடச் சுருங்கும் வாயிற்
பல்படப் பதிந்தான்; பாவை
அனிச்சமென் மலரின் மேனி
ஆடிடும் சுகத்தைக் கண்டாள்!

என்னதான் சுவையோ, அந்த
இரண்டித ழிடையே! ஐயோ!
சின்னதாம் பற்கள் தோயச்
சிலிர்ப்பதேன் உடலம் முற்றும்!
'இன்னதாம்' என்பார் இல்லை
என்னினும் அனைவோர் நெஞ்சும்
அன்னதால்வாழும் என்ருல்
அஃதலால் உயிரொன் றுண்டோ!

பாளையை அணைத்த வாறே
பஞ்சணை அருகே வந்து
காளைதன் கைக ளாலே
கனியவள் உடலம் தூக்கி
வாழையை மெல்லச் சாய்க்கும்
வகையினில் வைத்தான்; வைத்துத்
தாழையின் மணத்தை உண்ணச்
சாய்ந்தனன் அருகே! மெல்ல!

காம்பினில் தொங்கும் பூப்போல்
காற்றினில் ஆடும் மேனி
தாம்பிணைந் திறுகச் சேர்ந்து
தாளொடும் போர்த்தி மூடி
கூம்பிய விழியை நாவாற்
குழைவுற மலரச் செய்து
வேம்பினைத் தாராய்க் கொண்டான்
வெல்லத்தை விருந்தாய்க் கொண்
டான்!

சென்ற இதழ்த் தொடர்ச்சி

உச்சியிற் றொடங்கிப் பாத
உள்ளளவும் பெங்கும் ஓடி
இச்சிறு உலகை விட்டு
இருவரைத் தூக்கிச் செல்லும்
மெய்ச்சுகக் காமம் அந்த
வேளையிற் செங்கோல் ஓச்ச(க்)
கச்சணி மாது சோர்ந்தாள்;
காளையும் பாதி தேய்ந்தான்!

தேய்ந்தனன் எனினும் காமம்
தேய்ந்ததா? இல்லை! மேனி
ஓய்ந்ததாம் எனினும் உள்ளம்
ஓய்ந்ததா? இல்லை! பாவை
சாய்ந்தனள் எனினும் பார்வை
சாய்ந்ததா? இல்லை ஓய்ந்து
தேய்ந்ததும் சாய்ந்த தெல்லாம்
தென்றலும் நிலவும் பூவும்!

பாடிய வளையின் கைகள்
பற்றிய மன்னன், மாது
சூடிய மலரைப் பார்த்துத்
"தோற்றனை மலரே!" என்ருன்
ஆடிய விரலில், கூந்தல்
அரும்பிய மலரும் தோற்ருல்
கூடிய மேனிக் கிந்தக்
குவலயம் தோலா தோதான்!

அடுத்த இதழில்

**ஏகவாசகன்
குலோத்துங்க சோழ
வாணகோ வரையன்**

கண்ணதாசன்

எழுதும்

சிறு கதை

★

அழுகையும் சிரிப்பும்

நா. பாண்டுரங்கன், எம். ஏ.

எழுதும்

கற்பனைச் சித்திரம்

பகைவரின் சிரத்தி லேத
பாதத்தை வைப்பான் தல்
முகையவள் பாதத் தேதன்
முகத்தினை வைத்தா ந்தத்
தகையவள் "ஐயோ!" என்
தாவினள்! வதனந் து
நகைமுகம் மீதே வைத்து
நாவினுற் புனிதஞ் சேர் ள்!

கன்னம்வைப் பார்கள் தம்
கடுமையாய் வதைக்கும் ந்தன்
கன்னத்திற் கன்னம் வைத்
கனியினை அணைத்தான் கோ!
மின்னைவைத் திருக்கும் மாத
மேனியிற் கன்னம் வைத்
தென்னன்தன் நீதி சற்றுத்
திறந்துதான் கொடுக்கும் ாலும்

அழகிதன் வடிவில் வேறு
ஆடவர் காணு தான
குழைவுறும் அங்கம் முற்றும்
கோமகன் கண்டான்; மாத
பழகினள்; புதிதோர் கல்வி
பயின்றனள்; வாழ்க! என்
இழைகதிர் எழுந்தான்; அன்
இமைதொட்டு மலர வைத்த ன்!

"விடிகிற பொழுதிற் றுனே
விழிகளை மூடி னேம்நாம்!
படிஒளிக் கதிரோன் ஏனே
பறக்கிருன்!" என்றுர்; காற்றுக்
கடவினை அடைத்தார் மீண்டும்
கட்டிலிற் சாய்ந்தார்; காதல்
நடுவினில் எவர்வந் தாலும்
நஞ்சென வெறுக்கும் நெஞ்சம்!

தாழ்கெடக் கதவந் தட்டித்
"தலைவியே! வருக!" வென்னும்
தோழியர் குரலைக் கேட்டாள்;
துள்ளினள்; எழுந்தாள்; கீழே
வீழிய அணிகள் தூக்கி
விரைவினில் அணிந்தாள்; மார்பில்
நாழிகைக் கொன்றுய் ஏற்ற
நகக்குறி மறைத்தாள்; சென்றுள்!

ஓசையில் லாமல் தாழை
ஒதுக்கிய உடனே தோழிப்
பூசைகள் கைகள் கொட்டிப்
பொங்கின! மாதின் நெஞ்சை,
ஆசையில் இழந்த நாணம்
அணைத்தது மீண்டும்! ஆனுல்
மாசிலா இன்பத் தின்பின்
மலர்ந்தஇந் நாணம் வேரும்!

தனியனுய் வந்த வீரன்
தையலை அருகில் ஏந்தி
இனியனுய்ச் சென்றுன்; தேரில்
இருவரும் இருந்த காட்சி
முனிவனே கண்டா னேனும்
மூளும்இல் லறத்தில் ஆசை!
கனிவெலாம் திரண்டார் போகக்
கண்ணெலாம் கலங்கும் காணும்!

(தொடரும்)

2

திகைத்த தேசானந்தர், கடிதத்தைக் கையில் எடுத்தார். குழந்தை உயிரோடிருக்கிறதா என்று மூக்கில் விரலை வைத்துப் பார்த்தார். கோமளத்தின் தலை சுற்றிற்று. தேசானந்தரை அச்சம் பிடித்துக் கொண்டது. ''என்னடா இது! இப்போது தானே சிறையிலிருந்து விடுதலை யானேன்! அதற்குள் ஒரு கொலை வழக்கில் மாட்டிக்கொள்ள நேரும்போலிருக்கிறதே!'' என்று சிந்தித்தவாறு, கடிதத்தைப் பிரித்தார். அவரது மனத்திரையிலே ரயிலில் சந்தித்த பெண் வந்து நின்றாள். களைப்புற்றுக் காணப்பட்ட அவள் உருவம், களைப்புக்குப் பிரசவம்தான் காரணம் என்பதை இப்போதுதான் அவருக்குச் சொல்லிற்று.

கோமளம் சற்றுத் தெளிந்து, அந்தக் குழந்தையைக் கையில் எடுத்தாள். குழந்தையின் உடல் விறைத்திருந்தது. கோமளத்தின் மேனி சிலிர்த்தது.

தேசானந்தர் கடிதத்தைக் கூர்ந்து படிக்க ஆரம்பித்தார். கடிதம் கதைபோல நீண்டிருந்தது. முதற்பக்கத்தின் முன்னுரையும் இருந்தது. தேசானந்தர் படித்தார்:

''உங்களுக்குப் பேசும் சக்தி உண்டென்றால் இந்தக் கடிதமும் உங்களுடன் பேசும்! வாயில்லா ஒரு பெண்ணுக்காக இந்தக் கடிதம் உங்களுடன் வாதாடும். இந்தக் கடிதத்தைப் படிக்கும் நபர் யார்? எனக்குத் தெரியாது. எழுதுகின்ற நான் யார் உங்களுக்கும் தெரியாது. பின் எதற்காக உங்களுடன் வாதாட வேண்டும்? இந்தக் கடிதத்தைப் படிக்கும் நீங்கள் ஒரு ஆண் மகனாக இருக்கலாமல்லவா? இருந்தால், உங்களோடு வாதாட இந்தக் கடிதத்துக்கு உரிமை உண்டு. ஆனால், இந்தக் கடிதம் கிடைக்கப் பெற்ற நீங்கள் ஒரு லட்சியவாதியாகவோ, தேசத்தியாகியாகவோ இல்லாதிருக்க வேண்டும் என்பதுதான் எனது ஆசை.

—சீதா''

—தேசானந்தர் தலை நிமிர்ந்தார். என்ன பரிதாபம்! அந்தப் பெண்ணுடைய ஆசை எடுத்த எடுப்பிலேயே தூளாகி விட்டதே! கடிதம் ஒரு லட்சியவாதியின் கையில் கிடைத்துவிட்டதே! ''சரி, சரி! எவனோ ஒரு லட்சியவாதியின் தவறை வைத்துக்கொண்டு இவள் எல்லோரையுமே வெறுக்கிறாள்போலும்'' என்று எண்ணமிட்டபடி கடிதத்தைப் படிக்கலானார்:

''துன்பமயமான என் கதையைக் கேளுங்கள். வேடதாரியின் பின்னாலே வெகு வேகமாக ஓடி, நாடகத்தை முடிக்கவேண்டிய நிலைக்கு வந்துள்ள என் பரிதாபக் கதையைக் கேளுங்கள். கேட்டபிறகு உங்கள் கண்களிலே இரண்டு துளி கண்ணீர் உதிருமானால் — அதை நான் பார்க்க முடியாவிட்டாலும் — என் வாழ்விலே நான் காண ஆசைப்பட்டு என் கடிதம் மட்டுமே கண்ட கருணைக் கண்ணீராக அது இருக்கும். உல்லாச வாழ்வை எதிர்பார்த்தேன் நான். அது எனக்குக் கிடைக்கவில்லை; அவர் கிடைத்தார். அவரிடத்தில் அன்பை எதிர்பார்த்தேன். அது எனக்குக் கிடைக்கவில்லை; கர்ப்பிணி என்ற பட்டம் கிடைத்தது. குழந்தையைப் பெற்று ஒழுங்காக வளர்க்கத்தான் எண்ணினேன். அதுவும் எனக்குக் கிட்டவில்லை. காரணம், இது முறையோடு உருவான கரு அல்ல. இது என் வாழ்க்கையின் சுருக்கம். வேதனையான இதனை விவரிக்கச் சொல்லுகிறீர்களா? விவரிக்கிறேன்.

துன்பங்களைப் பிறரிடத்திலே சொல்லுவதால் மனதுக்கு ஒரு ஆறுதல் கிடைக்கும் என்பார்களே, அந்த ஆறுதலுக்காக இதைச் சொல்லுகிறேன். என் சொந்த ஊர் தஞ்சை. தாய் உண்டு; தந்தையில்லை. என்றால் நானும் கள்ளக் கருவில் பிறந்த குழந்தையோ என்று ஐயுறுகிறீர்களா? இல்லை! அப்படி இருந்திருந்தால் இந்தக் களங்கத்தையே பரம்பரைப் பண்பாக்கிக் கொண்டு வாழ்ந்திருப்பேன். ஆனால் ஒழுங்கான குடும்பத்தில் முறையாகத்தான் நான் பிறந்தேன். எனக்கு இரண்டு வயதானபோது தந்தை இறந்தார். தந்தையை இழந்த நான், தாயின் அரவணைப்பிலே வளர்க்கப்பட்டேன். தாய்க்கு என்ன மிட்டா மிராசையா வைத்துவிட்டுத் தந்தை இறந்தார்? இல்லை! ஆறு பவுன தாலி; நாலு பவுன் காப்பு; ஒரு மோதிரம்; ஆறு ஏக்கர் நிலம்; இவ்வளவுதான்! பதினைந்து ஆண்டுக் காலத்துக்கு உட்கார்ந்தபடியே சாப்பிட்டால், இது எந்த மூலைக்கு? பிறருடைய கண்ணீரைக் கண்டு கரையும் நல்லவர்கள் மனம் போல எங்கள் செல்வம் கரைந்தது. சிற்றாடை கட்டி, தாவணி போட்டு, பதினாறு வயதுப் பருவப் பெண்ணாக நான் வளர்ந்திருந்த நேரத்தில் மூன்று வேளை உணவிலிருந்து இரண்டு வேளை உணவிற்கு இறங்கியிருந்தது எங்கள் குடும்பம். இரண்டாண்டுகள்தான் அதுவும் நிலைத்தது. வயது பதினெட்டாயிற்று எனக்கு. என் அழகு பொலிவேறிய அந்தத் தருணத்தில் அடுப்பு நெருப்பேற மாட்டாமல் கிடந்தது. அத்தை வீட்டில் கொஞ்சம் அரிசியும், சித்தி வீட்டிலே பருப்பும் வாங்கி, எத்தனை நாள் குடும்பம் நடத்த முடியும்? வறுமை எங்களைத் தீராத நோயாகப் பிடித்தது. ஒருவேளை உணவாவது ஒழுங்காகக் கிடைத்தால் போதுமே என்று எண்ணமிடும் நிலைமை வந்தது. ஒரு நாள் அத்தை வீட்டுக்குப் போயும் அரிசி கிடைக்காமல் வெறுங் கையோடு திரும்பிக் கொண்டிருந்தேன். அப்போது பெரிய கோவில் தெருவிலே பெருங்கூட்டம் கூடியிருந்தது. நின்றபடி கவனித்தேன். என்னவென்று விசாரித்தேன். சிறந்த தேசபக்தராம். சிறைச்சாலைக்கு அஞ்சாத சிங்கமாம். ஈடு இணையில்லாத லட்சிய வாதியாம்! பெயர் சூடாமணியாம், அவர் பேசுகிறாராம். - சொன்னார்கள் இப்படி! சோகம் கப்பிய மனதுக்கு அந்தப் பேச்சாவது ஆறுதல் அளிக்குமா என்று ஏங்கியபடி நின்றேன். திடீரென்று கூட்டத்தில் பெருத்த கையொலி எழுந்தது. அந்த ஈடு இணையில்லாத இலட்சிய வாதி மேடைமீது ஏறி நின்றார். மாலைகள் நூற்றுக்கணக்கில் அவர் கழுத்தில் விழுந்தன. அவரைப் போற்றாத வாயில்லை; புகழாத நாவில்லை. ''ஊருக்கு உழைக்கிறார் உத்தமர்'' என்று ஒவ்வொருவரும் பேசிக்கொண்டார்கள்.

பேச ஆரம்பித்தார் லட்சிய வாதி. நான் பசியையும் மறந்து கேட்டுக் கொண்டிருந்தேன். பேச்சா அது? சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பெய்தது என்பார்களே, அந்த உவமை அந்தப் பேச்சுக்குப் பொருந்தும். நாட்டு மக்கள் எவ்வளவு நலிகிறார்கள், வெள்ளைக்காரன் எவ்வளவு கொள்ளையடித்துக் கொண்டு போகிறான், தேசத்தின் செல்வம் எப்படிச் சீரழிகிறது, ஏழை மக்கள் எவ்வளவு அல்லலுறுகிறார்கள் என்பதை எல்லாம் சொல்லுக்குச் சொல் இனிக்கும்படி எடுத்துக் காட்டிப் பேசினார். கூடியிருந்தவர்களின் கண்களிலே கண்ணீர் துளிர்த்தது. நானும் அழுதுவிட்டேன். அடாடா! இந்தச் சின்னஞ் சிறு வயதில் நாட்டைப்பற்றி இவருக்கு எவ்வளவு கவலை? அதற்காக இவர் சிறைக்கும் போகிறாரே என்று எண்ணியபோது அவரிடத்தில் எனக்கு அன்பும் பிறந்தது. இரண்டுமணி நேரம் பேசிய அவர், பெண்களின் அவதியைப்பற்றி ஏராளமாக எடுத்துச் சொன்னார். ''கற்பிழந்து கதறுகிறார்கள் பெண்கள்! ஐயகோ, பாரதநாடே! இது முறையா, நீதியா? மானத்தையே உயிராகக் கொண்ட பெண்கள் இப்படி அல்லலுறலாமா'' என்று அவர் கேட்டபோது அவர் பெண்ணினத்தையும் நன்றாகக் கவனித்திருக்கிறார் என்பதை என்னால் உணர முடிந்தது. வியர்த்து, விறுவிறுத்துக் கீழே இறங்கினார் அவர். கூட்டம் கலைந்தது. நானும் நடந்தேன். போகும்போது ஒருவர் சொன்னார் - அவர் தேசத் தொண்டிலே மட்டுமில்லையாம்; கலையிலும் அதிக ஈடுபாடுடையவராம்! நாட்டியம் என்றால் அவருக்கு உயிராம்! நாடகங்கள் பல எழுதியிருக்கிறாராம். இரண்டு சினிமாப் படங்களையும் டைரக்ட் செய்திருக்கிறாராம் எனக்கு ஒரே ஆச்சரியம்! அரசியலிலே இவ்வளவு அவதிப்படுகிறவருக்கு கலைக்கு ஒதுக்க நேரம் எங்கே கிடைத்திருக்கும்? சரி, சரி! ஓய்ந்த நேரங்களில் கலையில் தலை காட்டுவார் போலும்! என்று எண்ணிய

யே வீடுநோக்கிச் சென்றன். தாயிடம் சொல்வதற்கு ாளமான சேதி கொண்டு ாகிறேம் என்று பூரித்த யே சென்றேன். கதவைத் டினேன். திறந்தாள் தாய். காண்டு வந்தாயா' என்றுள். வள் கேட்டது அரிசி; நான் சால்ல வந்த சங்கதி அல்ல. டையாது என்று சொல்லி ட்டார்கள்' என்றேன். 'அதற் கன் இவ்வளவு நேரம்' என்று லயில் ஓங்கி அடித்தாள். நான் வில்லே. அவளது கோபத் க்குக் காரணம் பசி. பசி டுத்தவர்கள் கோபித்தால் காடுமைக்காரர்கள் கூடப் பாறுமையாய் இருப்பார்கள். ன் தாயின் முகத்தைப் பார்த் ன். எனக்குப் பதிலாக அவள் தாள். ஏன் அழுதாள் ன்பதற்கு அவளே காரணமும் சான்ஞள். என் பசியை எப் த் திர்ப்பது என்பதுதான் வள் கவலே. அப்போது ன்னே அவள் கொன்றே போட் ந்தாலும் நான் கவலேப்பட் டுக்கமாட்டேன். ஏன்? அவள் னக்காகத்தானே என்னேக் கால்கிருள்!

ஒரு மூலேயிலே போய் முடக் க் கொண்டு படுத்தாள் அவள். அம்மா' என்றேன். அந்தப் சத்தைத் தவிர வேறு எதை ன் தரமுடியும்? அருகிலே ன்றேன். அமர்ந்தேன். றகக் கண்களில் நீர் பெருக் அவள் முகத்தைத் திருப் னேன். ''கவலேப்படாதே ம்மா! காலேயில் நான் எங்கே வது கூலி வேலேயாவது செய் றேன்'' என்றேன். தாய் திடீ ன எழுந்தாள். என்னேக் கட்டி ணைத்துக்கொண்டு அழுதாள். சற்புறம் பார்த்து, 'யாரது' ன்றுள். நானும் திரும்பிப் பார்த்தேன். அங்கே ஒருவர் ின்றுகொண்டிருந்தார். அவரை எனக்குத் தெரியும். எங்களூர்க் காரர்தான். **வேலேயா** என்பது தான் அவருடைய பெயர். என் தாய்க்கு அவரைத் தெரியாது. பள்ளிக்காலங்களில் நான் அவ ரைப் பார்த்திருக்கிறேன். ஆகவே அவரை உட்கார வைத் துத் தாயிடம் அறிமுகப்படுத்தி னேன். 'என்ன விஷயம்' என் றும் அவரிடம் கேட்டேன். அவர் சொன்ன சேதி என்னே ஆனந் தத்தில் ஆழ்த்தியது. என் தாயும் மகிழ்ச்சியோடு என் முகத்தைப் பார்த்தாள். நான் அழகாய் இருக்கிறேனும்! அத ஞல் நாடகக் கம்பெனியில் சேர்க்க அவர் விரும்புகிருராம். கரை காணுமல் தவித்த எங்க ளுக்கு அந்தச் செய்தி பெருத்த ஆறுதலேத் தந்தது. எவ்வளவு அக்கறை எடுத்துக்கொண்டு அவர் எங்களேத் தேடி வந்திருக் கிருர். உலகத்திலே கருணேக் களஞ்சியங்களாகச் சிலபேர் இருக்கத்தான் செய்கிருர்கள் என்று எண்ணி நான் பூரித் தேன். அஞதைப் பெண்களிடத் தில் கருணே காட்டுகிறவர்களில் எத்தனே பேர் அந்தப் பெண் களேச் சகோதரிகளாக மதிப்பார் கள் என்பதைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது அப்போது. வந்தவர் என்னேச் சகோதரியாக மதித்துத்தான் இந்த உதவி யைச் செய்ய வந்திருக்கிருர் என்று கருதினேன்.

வந்தவரைச் சும்மா விடக் கூடாதே என்பதற்காகக் 'காப்பி சாப்பிடுகிறீர்களா?' என்று கேட்டு வைத்தாள் என் தாய். நல்ல வேளேயாக, 'வேண்டாம்' என்று சொல்லிவிட்டார் அவர். எங்கே சாப்பிடுகிறேன் என்று சொல்லிவிடுவாரோ என்று பயந்த நான் பெருமூச்சு விட்டு ஆறுதலடைந்தேன். நாடகக் கம் பெனிபற்றிய கற்பனே உடனே என் மனதில் பெருக்கெடுத்து ஓடத் தொடங்கியது. நாடகம் என்ருல் ஆயிரம் பேர், இரண் டாயிரம் பேர் பார்ப்பார்கள். மேடையில் நாம் சிரிக்கிற சிரிப் பையும் அழுகிற அழுகையையும் இமை கொட்டாமல் கவனிப் பார்கள்; ஆடும்போது ஆர வாரம் செய்வார்கள். பத்திரிகை களிலெல்லாம் நம் பெயர் வரும். நம் படத்தை வெளி யிடுவார்கள்! பணம் குவியும். கால் மேல் கால் போட்டுக் கொண்டு சாப்பிடலாம்—இப் படி வளர்ந்த கற்பனேயைக் கைப்பிடியாகப் பிடித்து நிறுத்தி ஞர் வேலேயா.

''நாளே, மறுநாள் சேலத்திற்குப்புறப் பட முடியுமா?'' என்று கேட்டார் அவர். என் தாயை யும் முந்திக்கொண் டு 'ஓ' என்றேன் நான். 'இடையில் இன்றும் நாளேயும் தானே பட்டினி' என்று என் பஞ்சை மனது சமாதானம் அடைந்தது. ஆனல் அதற்கும் இடம் இல்லாமல் இரு பத்தைந்து ரூபாய் களே எங்கள் முன் னல் நீட்டி, 'இதை அச்சாரமாக வைத் துக் கொள்ளுங் கள்' என்ருர் அந்தக் கருணேக் கடல். பிறகு அவர் சொல்லிய விவரத் திலிருந்து நாடகக் கம்பெனியை நடத் துபவர் அவரு டைய நண்பர் என்றும் அவருக்காக இவர் செய்யும் ஏற்பாடு தான் இதுவே தவிர, இவருக்கு அதில் வேறென்றும் பங்கு கிடையாது என்றும் தெரிந்து கொண் டேன். என் தாய், பணம் கிடைத்த மகிழ்ச்சியில் காப்பி வாங்க ஓடினுள். அவள் தலே மறைந்த தும் மறையாததுமாக அவர் என்னே அரு கிலே அழைத்தார். நான் கொஞ்சங்கூடக் களங்கமின்றி அவர் அருகிலேசென்றேன். தனியாக இருக்கும் ஒரு ஆடவன் ஒரு பெண்ணே அருகே அழைத்தால், போக லாமா என்று கேட் பீர்கள் நீங்கள். அப்போது நீங்கள் மட்டும் நாஞக இருந்திருந்தால் நீங்கள் கூடத்தான் போயிருப் பீர்கள். அவ்வளவு உத்தமமான அவரருகில் போக யாராவது பயப்படுவார்களா? நான் போய் கைக்கெட்டும் தூரத்தில் நின் றேன்.

''கேள் சிதா! நாடகக் கம் பெனி முதலாளி மிகவும் நல் லவர். தியாகி சூடாமணிதான் அவருக்குக் கதை எழுதித் தரு கிருர். அவர்களிடம் நீ நல்ல முறையில் நடந்து கொண்டால் பிறகு பெரிய பெரிய நட்சத்திரங் களோடு நீயும் சமமாகி விட லாம்'' என்ருர். ஆம்! அவர் தனக்காகப் பேசவில்லே. இன் ஞெருவருக்காகப் பேசுகிருர். நான் சம்மதித்தேன். நல்ல முறையில் நடப்பதென்ருல் எப் படி? மிகவும் மரியாதை காட்ட வேண்டும் போலிருக்கிறது என்றுதான் நான் நினைத்தேன். ஆனுல் நாடக உலகில் நல்ல முறை என்பது வேறு மாதிரி என்பதைப் பிறகுதான் தெரிந்து கொண்டேன். அவரும் கொஞ் சம் மூடகமாக அதைப்பற்றிச் சொன்ஞர் என்ருலும், அதைப் புரிந்து கொள்ளக் கூடிய பக்கு வம் எனக்கு அப்போது இல்லே.

''கொஞ்சம் அப்படி யிப்படி இருக்கும்; அதெல்லாம் அனு சரித்துக் கொண்டால் எதிர் காலம் பிரகாசமாக இருக்கும். என்ன இது? உலகத்தில் இல் லாத காரியமா?'' — இப்படி யெல்லாம் பேசினுர் அப்போது. நிச்சயமாகச் சொல்கிறேன், அதை நான் புரிந்து கொள்ள வில்லே. புரிந்து கொண்டிருந் தால் அவர் கொடுத்த பணத்தை அவர் முகத்திலேயே வீசி அடித் துத் துரத்தியிருப்பேன். அன்பு காட்டுபவர்கள் சொல்வதெல் லாம் நல்லதாகத்தான் இருக்கும் என்று எண்ணியே சம்மதித் தேன்.

மறுநாளுக்கு மறுநாள்! நாங் கள் சேலத்திற்குப் புற டோம். எங்களோடு வே வும் வந்தார். ஒரு ஓட் எங்களேத் தங்க வை ஓட்டலில் இறங்கிய உட ஓட்டல் பையன் என்னிட விஷயத்தைத் தெரிவித் அடுத்த அறையில்தான் மணி தங்கியிருக்கிருர் எ தான் அது. நான் மகிழ் ஊருக்கு உழைக்கும் உ நமக்கும் கொஞ்சம் உ மாட்டாரா என்ற ஆ மெல்ல வெளியிலே வந்து அந்த அறையை எட்டிப் பார்த்தேன். தடவை அப்படிப் போது வேலேயாவும் யும் பேசிக் கொண்டி கண்டேன். நம் வ பேசுவார்கள் என் எண்ணிக் 'கொ கொஞ்ச நேரத்தி நாங்கள் இருந்த தார். மாலேயில் மட்டும் நாடகக் போகவேண்டுமென் ஒப்பந்தம் செய்ய எல் ராய் இருக்கிறதென் போக வேண்டியதில் அவர் சொன்ஞர். தேன்.

மாலே ஆறு ம என் தாய் வேலேய பட்டாள். நான் லாம் செய்து கெ லேயே உட்க இரண்டு அறை விலே பொதுவ திறக்கப்படுவ நான் திகைத்த கதவைத் திறந் மணி உள்ளே

இடம், பொருள் அறியாக் கம்பன்!

கார்மேகங்களற்ற, தெளிவான நீலவானை நிமிர்ந்து நோக்கின், எங்கும், சுடர்விடும் நட்சத்திரக் கூட்டங்களைக் காண இயலும். அதுபோல் விருப்பு வெறுப்பற்று, பொதுவாகக் கம்பன் தந்த ஏட்டை நோக்கின்...உண்மையைக் கூறின் எங்கு நோக்கினும் ஆபாசம்! எவரும் இதை மறுத்துரைக்க இயலாது!!

தமிழர் தம் வாழ்விற்கு, அவர்தம் இனத்திற்குச் சாவுமணி அடிக்க அரும்பாடுபட்டது ஓர் இனம்! தளிர்மேனியைப் பணயம் வைத்து, துடியிடையையும், கோவை இதழையும் பரிசாகத் தந்து, பொன்னைப் பெற்று, மண்ணைப் பெற்று, அவர்தம் வாழ்விற்கு ஆக்கம் தேடிக்கொண்ட, புல்லுருவிகளின் இனம் பாடும், பன்னிரெண்டாம் நூற்றாண்டின் காவியமாம், கம்பராமாயணத்தில் கம்பன் தன் 'கவிச்சுவையை' முழுதும் காட்டியிருக்கிறான்.

எந்த இனம் வாழப்பாடினாரோ... பாட வைத்தனரோ, அந்த இனத்தின் பண்புகளை ஆங்காங்கே தெள்ளத்தெளிய அவன் எழுத்தாணி எழுதி முடித்திருக்கிறது!

மாபெருங் காவியத்தின் தலைவியாயிற்றே, இந்த நாட்டின் மகளிர் குலத்தேவியாயிற்றே என்று அன்னை சீதா பிராட்டியையாவது கிழான முறையில் வர்ணிக்காமல் விட்டிருக்கின்றானா? கிடையவே கிடையாது! ஆண்டவன் அவதாரம் ஆயிற்றே, அகிலம் வணங்கும் ஸ்ரீராமச்சந்திரப் பிரபு ஆயிற்றே என்று அவருக்குரிய

★ நகர்நீங்கு படலத்தில் நாகரிக மின்மை! ★

இலட்சணங்களையும், முறையான உரையாடலையுமாவது புனைந்திருக்கக்கூடாதா? அதுவுமில்லை. இடம், பொருள், ஏவல் எதுவும் நோக்காமல், அவனது எண்ணங்கள் மகளிர் கொங்கைகளைச் சுற்றியே வருகின்றன! ஆண், பெண் புணர்ச்சி பற்றியும் அழகுபடப் புனைந்து மகிழ்கிறான்! ஒருவேளை அதுதான் கம்பன் கவிதாசக்தியின் தனித்தன்மையோ......அதுதானென்றால் நிச்சயம் கம்பன் மாபெருங் கவிதான்! அவனை வெல்ல உலகிலே எவருமே இல்லைதான்!! வைதிகர்கள் ஆறுதலடையட்டும்!!! இனி அவன் பாடல்களிலே அமைந்த அவனது தனித்தன்மையைக் காணுவோம்!

தயரதன் மனமுவந்து ராமனுக்குத் தரவிருந்த அரசு, கைகேயியின் சாமர்த்தியத்தினால் அவள் மகன் பரதனைச் சேருகிறது. கைகேயி கேட்டுக்கொண்ட வரத்திற்கிணங்க ராமன் பதினான்கு வருடங்கள் காடேக வேண்டிய நிலைமையும் உண்டாகிவிடுகிறது.

இதைக் கேள்வியுற்ற அயோத்தி நகர மாந்தரின் துயரம் அளவைக் கடக்கிறது. கண்ணீர்விட்டுக்கதறி அழுகிறார்கள்; அரற்றுகிறார்கள். தொட்டிலிலே கதறிஅழும் பச்சிளங் குழந்தைகளையும் மகளிர் தொடுவதில்லை. தாய்மையே அற்றுப்போகும் அளவிற்கு மகளிர் நிலைமை சென்றுவிட்டது! அவ்வளவு ஏன்? கிளியும், பூனையுங்கூட அழுதிருக்கின்றனவென்றால் பாருங்களேன்! ஆனால் இத்தகைய துயர்க்கட்டத்திலும் கம்பன் வரிக்கு வரி ஆபாசத்தை வேண்டுமென்றே புகுத்தியிருக்கிறான். ஆபாசமான அங்க வர்ணனைகளுக்காகவே துயர நிலையை விளக்கும் அநேக பாடல்களைப் புனைந்திருக்கிறான் போலும்.

அழகான மங்கைகள் பலவாறு துயரப்பட்டுத் தங்களை மறந்துவிட்டிருக்கும் நிலைமையில், உருண்டு திரண்ட கொங்கையும், கொய்தளிர் மேனியும், பச்சிளங் கொடிபோல் துவளும் துடியிடையும் புழுதியில் புரள்வதைக் காணப் பொறுக்க முடியாமல் கம்பன் உண்மை நிலையைப் பாடிவிட்டான். அன்றியும் அவர்கள் தேம்பி அழும்போது விம்மும் அவர்களின்பருத்த தனங்கள் அவன் கண்களில் பட்டு, அவன் எண்ணத்தை மாற்றியதும், அவன் தவறல்லவே! அது இயற்கையாயிற்றே!!

ஆனால் ராமன் சீதையுடன் காடேகப் போகிறான்; பரதன் நாட்டையாளப் போகிறான் என்பதை அறிந்த நகரமாந்தர் பலவாறு எண்ணித் துயரப்படுகிறார்கள். "ராமனுக்குக் கொடுத்த நிலமானது (அரசு) பரதனைச் சேருமாம், ராமன் காட்டிற்குச் செல்ல அவனோடு அவன் மனைவியும் காடேக வேண்டுமாம். அவ்வாறு சீதை இல்லாத இந்த இடத்தில் இலக்குமியும் குடிகொண்டு பரதனை அங்கிகரிப்பளோ........" என்று மக்கள் ஏளனமாக எண்ணிப் பலவாறு வருந்துவதாக, ஒருகட்டம் வருகிறது.

சாதாரணமான இந்தக் கட்டத்தை எத்தனையோ விதமாக, நல்ல முறையில் அழகுபட விளக்கியிருக்கமுடியும் கம்பன், முயன்றிருந்தால்! அப்படிச் செய்தால் பின் கம்பன் கவிச்சுவை என்னாவது? கவிச்சுவை குறைவுபட்டாலும், அவனது நெஞ்சிலே மண்டிக் கிடக்கும் காம நினைவுகள்தான் அவனைச் சும்மாவிடுகின்றனவா?

அதனால்தான் தேவையற்ற இந்த இடத்திலும் வலிய ஆபாசத்தைப் புகுத்தியிருக்கிறான். இதோ அதை விளக்கும் பாடல், அயோத்தியா காண்டம், நகர்நீங்கு படலத்தில் காணக்கிடக்கிறது.

கோதை வரிவிற் குமரந்
கொடுத்த நில
மாதை யொருவர்
புணர்வராம் வஞ்சித்த
பேதை சிறுவனைப்
பின்பார்த்து நிற்குமே
சீதை பிரியூறுந்
திராத் திருவென்பர்."

"வெற்றிமாலையை அணிந்து, வில்லைத் தாங்கியிருக்கும் ராமனுக்குக் கொடுத்த நிலமாகிய அழகிய பெண்ணை வேறொருவர் புணர்வாராம். ராமன் காடேகியபின், அவனுடன் அவன் மனைவி சீதையும் காடேகிய பின்னும், வஞ்சனை செய்து அரசைப் பெற்றுக்கொண்டவளின் மகனான பரதனை இலக்குமி அங்கிகரிப்பளோ" என்பது பாடலின் கருத்து.

பார்த்தீர்களா, "தயரதன் மனம் உவந்து ராமனுக்குக் கொடுத்த நிலமானது பரதனைச் சேருமாம்" என்று ஏளனக் குறிப்போடு மக்கள் எண்ணும் கருத்தமைந்த இந்தக் கட்டத்திலும் வலிய ஆபாசத்தைப் புகுத்தியிருக்கிறான் காம எண்ணங்கொண்ட கம்பன். உடனே நிலத்தை ஒரு பெண்ணாக உருவாக்கி, அவளுக்குத் தகுந்த மணவாளனாக ராமனை உருவகப்படுத்தி, ராமன் அவளை, பட்டு விரித்து மலர் தூவிய மஞ்சத்தில், கட்டி அணைத்து, கனியிதழ் ரசம் பருகி, தளிர் உடல் வியர்க்க, சிலம்புகள் கொஞ்ச, துவளும் துடியிடை அஞ்ச, மெய்சிலிர்க்கப் புணர்ச்சி செய்யாமல், வேறொருவர் அவளைப் புணர்கிறாரே என்று மக்கள் அங்கலாய்ப்பதாக, தேவையற்ற ஆண், பெண் உடல் சேர்க்கையை விளக்கும் ஆபாசமானதோர் உதாரணத்தைக் கூறவேண்டிய அவசியம் என்ன? சிறிது சிந்தித்துப் பாருங்கள்!

இங்கு மட்டும்தான் இப்படி என்று எண்ணிவிட வேண்டியதில்லை. மற்றும் ஓர் காட்சியைக் காணுவோம்......

அண்ணல் ராமனும், அன்னை சீதையும், மற்றும் அவர்களோடு வந்த அனைவரும் கானகத்தின் வழியே நடந்து செல்லுகின்றனர். வழியிலே காணும் கண்ணுக்கினிய இயற்கை வளங்களை ராமன், சீதைக்குக் காட்டிக்கொண்டே வருகிறான். அவர்கள் இருவரும் உரையாடும் அழகு இருக்கிறதே, ஆகா! அதன் அழகே அழகு! இருவரும் தனிமையில் இருக்கும்போது, கொஞ்சிக் குலவினாலும், தாவி அணைத்துக்கொண்டாலும், அங்கம் அங்கமாக ஆராய்ச்சி நடத்திக்கொண்டாலும் அதைப் பற்றி எவரும் கண்டிக்கப்போவதில்லை. அதற்காகத் தானே அன்னை ஆடம்பரங்களைத் துறந்து, ஆடவனின் கரம்பற்றி, கன்னிமாடத்தை விடக் கானகமே மேல் என்று ராமனுடன் மரவுறி தரித்து, தாமதிக்காமல் புறப்பட்டுவிட்டார்கள்! பின் என்ன? கணவனுக்குப் பணிவிடைகள் பலவும் புரிந்து பாதுகாக்கவா? அவள் எந்தப் பணிவிடையும் செய்ததாகக் கம்பன் ஒரு இடத்தில் கூட மறந்தும் கூறவில்லையே! அவளுக்கு அழகை விளக்கவும், அவளைப் பாதுகாக்கவுமே இருவருக்கும் நேரம் சரியாக இருந்ததே! பணிவிடைகள் பலவும் புரிந்து, இருவரும்இரவில் புல்தரை என்றும், நாணற்புதர் என்றும் பாராமல் அணைந்து மகிழ்ந்த நேரத்தில் எல்லாம்கூட பாதுகாக்க, தம்பி இலட்சுமணன் இருந்தானே......! அது போகட்டும், தனிமையில் அவர்கள் எப்படி நடந்துகொண்டால் நமக்கென்ன? மற்றவர்களும் அருகில் குழுமியிருக்கும்போது எப்படி நடந்துகொள்ள வேண்டும் எனும் சாதாரண அறிவு கூடவா இல்லாமல் போய்விட்டது ஆண்டவன் அவதாரங்களுக்கு!

சீதையும், ராமனும் ஆண்டவன் அவதாரங்கள்; மக்களினத்திலே உள்ள மாசு போக்க இந்த மண்ணிலே அவதரித்தவர்கள்! இப்படிச் சொல்லப்படும் ஆண்டவன் அவதாரங்கள் உரையாடும் அழகைப் பாருங்கள். அதுவும் தங்களைச் சுற்றி ஏராளமானவர்கள் குழுமியிருக்கும்போது......!

என் அன்பே! சீதா, அதோ வண்ணமலர்களில் தேனுண்டு மயங்கி நிற்கும் வண்டினம் காண்! துள்ளித்திரியும் புள்ளிமான் கூட்டம் நோக்கு! சலசலக்கும் பளிங்கு நீரோடை, அதிலே மலர்ந்த முகம் காட்டி நம்மை வரவேற்கும் தாமரைகள் பாராய்! உன் முகத்திற்கு அது ஈடாகுமோ, செம்பாவாய்! என்று உரையாடியிருப்பார்கள் என்று யாரும் எண்ணவேண்டாம். என் அன்பே சீதா! என் கண்ணே! என் உயிரே! என்றெல்லாம் சாதாரணமாக அழைத்தால் பின் 'ஆண்டவன் அவதாரங்களுக்கும்,' சாதாரண மானிடர்களுக்கும் என்ன வித்தியாசம்!

ராமன், 'ஒழுக்கமாக உரையாட வேண்டும்; நம்மைச் சுற்றிலும் இத்தனை பேர் இருக்கிறார்களே! தனிமையாக இருந்தாலும் பரவாயில்லையே' என்று தயங்கியிருந்தாலும், கண்களில் எந்நேரமும் காமம் வழியும் கம்பன் விட்டுவிடுவானா? மங்கையரின் தெய்வம் - அன்னை - பாரதப் பண்பாடு விளக்கும் பத்தினிக் கடவுள் - சீதையை அழைத்து ராமன் உரையாடுவதைக் கூறுகிறான் கம்பன் - கேளுங்கள்.

"ஏந்திள முலையாளே
வெழுதரு மெழிலாளே
காந்தளின் முகைக்கண்ணிற்
கண்டொரு களிமஞ்ஞை
பாந்தளி தெனவுண்ணிக்
கவ்விய படிபாராத்
தேந்தள வுகள்செய்யுஞ்
சிறுகுறு நகைகாணாய்"

"காந்தளின் மொட்டை, பாம்பு என்று எண்ணி, ஒருமயில் தன் அலகினால் கொத்தியதைக் கண்டு தேனையுடைய முல்லைமலர்கள் சிரிக்கின்றன, பார்" என ராமன், சீதைக்குத் தான் கண்ட காட்சியைக் காட்டி விளக்குகிறான். இக்காட்சியைக் கண்டு மகிழத் தன் மனைவி சீதையை, தன் தம்பியும், மற்றவர்களும் புடைசூழ இருக்கும்போது எப்படி அழைக்கிறான் பார்த்தீர்களா? எழுதுவதற்கு முடியாத அழகை உடையவளே! சாயாமல், நிமிர்ந்த வண்ணமாக இருக்கும் இளமுலையுடையவளே...! அதாவது அவன் பாணியில் "ஏந்திள முலையாளே!" அதுவும் சாதாரண ஒரு பெண்ணையா? கடவுட் தன்மை பொருந்தியவள் என்று கூறப்படும், காவியத்தின் பண்புள்ள தலைவி ஸ்தானத்தில் இருப்பவளை! பெருங்காவியம் என்றால் இன்னாரை இப்படித்தான் அழைக்கவேண்டும் எனும் ஒழுங்கு முறைகூடக் கிடையாதா? இதுதான் கடவுட் தன்மையா? ஆண்டவன் அவதாரங்களின் நற்பண்பை விளக்கும் நல்ல முறையா? யாரும் பதில் கூறவேண்டாம்! சிந்தித்துத் தெளிந்தால் போதும்.

எத்தனையோ இடங்களில் இப்படித்தான், ராமன், சீதையைப் பலர் முன்னிலையில் ஆபாசமாக வர்ணிப்பதாகக் கம்பன் வரைந்துள்ளான். மற்றோரிடத்தில், கானகத்தில் தென்றல் காற்று வீசுகிறது. அவ்வாறு வீசுவதனால் மலர்களில் உள்ள மகரந்தப் பொடிகள் காட்டினிடையேயுள்ள கற்களின்மீது அழகாகச் சிந்திக் கிடக்கிறது. கண்டான் ராமன், இக்காட்சியை! உடனே

— 11-ம் பக்கம் —

இவர்

இதோ ராஜிஞமா !
அதோ ராஜிஞமா !
இன்றைக்குச் செய்துவிடுவார் !
நாளைக்குச் செய்துவிடுவார் !

—என்றெல்லாம் பேசினுர்கள் நிதியமைச்சர் சிந்தாமணி தேஷ்முக் குறித்து. பம்பாய் பிரச்சினை அவிழ்க்கமுடியாத முடிச்சாகிக் கொண்டு வந்தபோது, தேஷ்முக் பிரச்சினையும் உருவெடுக்க ஆரம்பித்தது. இடதுசாரிச் கட்சிகள் சிந்தாமணியாரைப் பாராட்டின – பாராட்டப்பட வேண்டியவர்தான் ! ஆனுல் பலமுறை அவர் 'வெற்றிகர வாபஸ்' பெற்றிருக்கிருர். நேரு சொல்கிருர் என்ன செய்வது ? கட்சி முக்கியஸ்தர்கள் வேண்டிக் கேட்டுக்கொள்கிருர்களே அதைத் தட்டமுடியுமா? என்ற உட்காரணங்களால் சிந்தாமணியாரின் மாஜி ராஜிஞமாக் கடிதங்கள் மறக்கடிக்கப்பட்டன என்று சொல்லப்படுகிறது. உண்மையும் அதுதாஞ என்று உறுதி கூறுவதற்கில்லை.

தேஷ்முக்கின் ராஜிஞமாவை ஏற்றுக்கொண்டால்,மராட்டியர்கள், இனி பம்பாய் முடிவு மாற்றமுடியாததாகிவிட்டது என்று எண்ணிக் குழப்பம் விளைவிப்பார்கள் என்று அஞ்சியோ, அல்லது தேஷ்முக் போய்விட்டால் வேறு எந்தக் கட்சியில் நிதியமைச்சர் பதவிக்கு வலை போடுவது என்று வெட்கித்தோ, நேருப் பண்டிதர் அன்றே சிந்தாமணியாருக்கு "நன்றி" சொல்ல முன்வரவில்லை என்று பெரும்பாலோர் நினைக்கிருர்கள். இந்தக் கருத்தை நம்புவதற்கு இடமுண்டு. ஏனென்ருல் இதுவரை டெல்லியிலே நிதிமந்திரியாக காங்கிரஸ்காரர்கள் இருந்ததில்லை. காரணம், காங்கிரசில் அதற்கான விவேகமுள்ளோர் இல்லை.

இறுதி முறையாக தேஷ்முக்கின் ராஜிஞமாவை நேரு ஏற்றுக்கொண்டிருக்கிருர். ஆனுலும் **'சற்றுப் பொறுங்கள்'** என்ற தோரணையில் தான் வெளிநாடு சென்று திரும்பும் வரையில் பதவியிலிருக்கச் சொல்லியிருக்கிருர் நேரு. ஆகையால் இந்த ராஜிஞமாக் கடிதத்தையும் நம்புவதற்கில்லை.

ஒருவேளை அடுத்த நிதிமந்திரியாக யாராவது தமிழர் ஒருவரை நேரு பிடித்துப் போடுவார் என்று எதிர்பார்க்கலாம் ! தமிழர்களின் முன்னேற்றத்தில் நேருவுக்கு அவ்வளவு அக்கறை என்று பொருளல்ல! தமிழனைப் போட்டால்தான் தமிழ்நாட்டுக்கு விரோதமாக டில்லி எவ்வளவு கொடுமை புரிந்தாலும் அவன் பதவியிலிருந்து விலக மாட்டான்; அவன் சுரணை இழந்தவன் என்று பண்டிதர் எண்ணியிருக்கக்கூடும்! தமிழ்நாட்டுக் காங்கிரஸ்காரர்களை டில்லி அப்படித் தானே நினைத்திருக்கிறது ?

மொத்தத்தில் தேஷ்முக் இந்த முறை ராஜிஞமா செய்துவிட்டு வராவிட்டால் மராட்டிய மண்டலத்தை அவர் இழந்தார் என்று தான் பொருள். தேஷ்முக் தாயகம் திரும்பிவிட்டால் காங்கிரஸ் கட்சிக்காரர்களுக்கும் மற்றவர்களுக்கும் வித்தியாசமிருக்கத்தான் செய்கிற தென்பார்கள்; விலகாவிட்டால் காங்கிரஸ்காரர்களோடு இணைந்துவிட்டால் கனிரசமும் கடுவிஷமாகி விடுகிறதே என்பார்கள். தேஷ்முக் விஷமாகி விடக்கூடாது என்பதே நமது ஆசை ! காங்கிரசின் மூத்த கொள்கையான மொழிவழி மாநிலப் பிரிவினையை வரவேற்கும் நல்லோர் அனைவரும் அப்படித்தான் நினைப்பார்கள். ஆனுல், 'மான்செஸ்டர் கார்டியன்' என்ற பத்திரிகை இது பற்றிக் குறிப்பிடுகையில்,

"போய்விடுவேன் போய்விடுவேன் என்று அவர் பலதடவை பயமுறுத்தியிருக்கிருர். இது நேருவுக்குப் பொறுக்கமுடியாமற் போயிருக்கவேண்டும்.

மிகவும் முக்கியமான ஒரு தருணத்தில் அதாவது இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பமாகும் சமயத்தில் தேஷ்முக் விலகுகிருர். திட்டத்திலுள்ள அபிப்ராய பேதம் காரணமல்ல. அதற்குச் சம்பந்தமில்லாத உள்ளூர் விஷயமான பம்பாயின் எதிர்காலம் பற்றிக் கோபித்துக்கொண்டு போகிருர்"—என்று குறிப்பிட்டிருக்கிறது. நேருவையும் கண்டிக்காமல், தேஷ்முக்கையும் கிண்டல் செய்து அந்தப் பத்திரிகை எழுதியிருக்கிறது.

"காங்கிரசில் ஒரு நல்ல மந்திரி கிடைக்கமாட்டார். ஆகவே, தாம் விலகுவதாக மிரட்டினுல் பம்பாய்ப் பிரச்சினை சாதகமாக முடிந்துவிடும்" எனத் தேஷ்முக் எண்ணியிருந்ததாக 'கார்டியன்' கூறுகிறது. ஒருவேளை தேஷ்முக் அவ்வாறு எண்ணியுமிருக்கலாம். டில்லியிடம் மிரட்டல் பலிக்காது போய் தேஷ்முக் தொடர்ந்து மந்திரியாக இருந்தால் மராட்டியம் என்ன செய்யுமோ ?

—தெ.

பொறுப்பற்றவர் !

"கிடப்பதெல்லாம் கிடக்கட்டும் கிழவியைத் தூக்கி மடியில் வையுங்கள்" என்ருராம் யாரோ ஒருவர். அந்த நிலைமைக்குத்தான் வந்திருக்கிருர் இந்தியத் துணைக்கண்டத்தின் பிரதமர். நாடும் நகரமும் இருக்கிற நிலையை எல்லாம் மறந்துவிட்டு, தனது ஊர்சுற்றி வாழ்க்கையை மிகவும் உன்னதமாகத்தான் நடத்திவருகிருர்.

கெஜட் பதிவில்லாத அலுவலகர்களின் துயரத்தை மாநிலங்கள் தீர்க்கமுடியாததால் அவர்கள் மத்திய சர்க்காரை நாடுகின்றனர். உண்மையிலேயே மாநில சர்க்காரின் அலுவலகங்களில் அலுவல் பார்க்கும் குமாஸ்தாக்கள் பலவிதத்திலும் தொல்லைப்படுகிருர்கள். அந்தத் தொல்லைக்கு எல்லையே கிடையாது. அப்படியிருக்க அதை நீக்குவதற்கு மாநில சர்க்காரோ மத்திய சர்க்காரோ வழி செய்வதில்லை. அதனுல் அண்மையில் சென்னை மாநில என். ஜி. ஓக்கள் குழு ஒன்று தங்கள் சம்பளம், படிகள் சம்பந்தமான மனுவைப் பிரதமர் நேருவிடம் சமர்ப்பிக்க டில்லி சென்றது. ஆனுல் என்ன நேர்ந்தது தெரியுமா? அந்தப் 'பெரிய மனிதர்' நேரு, பேட்டி அளிக்க மறுத்துவிட்டார். இதற்குக் காட்டும் காரணம் வேடிக்கையாக மட்டுமல்ல விநோதமாகவும் இருக்கிறது.

லண்டனுக்குப் புறப்பட ஏற்பாடு செய்வதில் அவர் சுறு சுறுப்பாக இருப்பதால் பேட்டி அளிக்க மறுத்துவிட்டாராம்! உண்மையிலேயே பொறுப்புள்ளவர்செய்யும் செயலா இது ? இந்தியத் துணைக் கண்டத்தின் ஜனுபதியாக இல்லாவிட்டாலும், பிரதமர் என்ற பேரால் ஜனுதிபதியையே ஆட்டிவைப்பவர்–சுய கட்சியால் மனிதருள் மாணிக்கம் என்று போற்றப்படும் 'மகானுபாவர்' அவர் இந்த மாதிரி அலட்சிய நோக்கத்துடன் இருக்கிருர்; இருந்தும்கூட சென்னை மாநிலக் 'காங்கிரஸ் திராவிடர்கள்' அந்தப் 'புனிதரை'ப் போற்றுகிருர்கள்; அவர் புகழ்பாடுகிருர்கள். வேடிக்கை ! வேடிக்கை !

"நாட்டுமக்களைப் பற்றி எனக்குச் கவலையில்லை. அரசாங்க ஊழியர்களைப் பற்றி அக்கறை இல்லை ! நான் வெளிநாடு சுற்றுப்பிரயாணம் செய்யவேண்டும் ! அதன்மூலம் கணக்கற்ற பணத்தை விரயம் செய்யவேண்டும்" என்று எண்ணிச் செயலாற்றும் அந்த விந்தை மனிதரைப் பற்றி என்ன சொல்வது என்று புரியவில்லை !

கண்ணியமோ, கட்டுப்பாடோ, கடமையோ கிடையாதவர்கள் காங்கிரஸ் கட்சியில் சாதாரண உறுப்பினர்களாக மட்டுமல்ல, கட்சித் தலைமைப் பீடத்திலும் தலைவர்களாக அலங்காரக்கொலுவீற்றிருக்கிருர்கள் என்பது புரிகிறது.

ஆனுல் இனியும் இவர்கள் உலகத்தை ஏமாற்ற முடியாது. இவர்களது வாலை அறுக்குங்காலம் மிக விரைவில் வந்துகொண்டிருக்கிறது என்பதை மட்டு நினைவுபடுத்துகிருேம்.

—த.

விரைவில் வெளி வருகிறது !

"முல்லை"

[இலக்கியத் திங்களிதழ்]

ஆசிரியர் ; **கண்ணதாசன்**

விலை அணு எட்டு

◉

முல்லை

சென்னை - 6.

பராசக்தி
கிராஸ்வேர்ட்ஸ்

Post Box No. 5. காஞ்சிபுரம்

போட்டி நெ. 151 ல் மகத்தான பம்பர் பரிசு

ரூ. **2,30,000**

இன்றே கூபனுக்கு எழுதுங்கள்

எங்கும் கலெக்டர்கள் தேவை

சுவைமிக்க தமிழ் நூல்கள்

கண்ணதாசன் எழுதிய

ராஜதண்டனை	...	ரூ.	2	0	0
ஆயிரம் தீவு அங்கயற்கண்ணி	...	,,	4	8	0
ஈழத்து ராணி	...	,,	1	0	0
பெரும் பயணம்	...	,,	1	0	0
இலக்கியத்தில் காதல்	...	,,	1	4	0
கூட்டுக்குரல்	...	,,	1	0	0
த்மிழர் திருமணமும் தாலியும்	...	,,	0	6	0

எஸ். எஸ். தென்னரசு எழுதிய

சந்தன மழை	— புதிய நாடகம்	...	,,	1	0	0
தேவாலயம்	,,	...	,,	1	4	0
கண்மணி	— நாவல்	...	,,	1	0	0

தமிழ்நாடெங்கும் விற்பனையாளர்கள் தேவை.

முன்பணம் அனுப்பியோ வி. பி. மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

அருணோதயம் : : சென்னை - 14.

கோஷ்டி சேர்க்கிருர்கள்...

— 5-ம் பக்கத் தொடர்ச்சி —

பாமரர்களுக்கு உணர்த்துகிருராம்! இதுதான் அவருடைய எண்ணம் என்பது அனேவருக்கும் புரிகிறது.

இந்திய சர்க்கார் என்ற மூத்த அண்ணன், மற்ற சகோதரர்களைப் பிரிந்து போகவொட்டாது வேண்டிக் கேட்டுக் கொள்கிருன். ஆனல் அவர்கள் கேட்காது பிரிந்துபோய்த்திருடனிடம் சொத்தைப் பறிகொடுத்து விடுகிருர்கள்.

டில்லி அண்ணன் வீட்டில் சோற்றுப் பானைகள் மட்டும் காலி செய்யப்படுகின்றன. திருடர்களுக்கு மூத்தவர்பால் பயம். அதனுல்தான் அந்த வீட்டில் நகைகள் திருட்டுப்போகவில்லை!

ஆரியர், திராவிடர் பிரிவினையில் நமது கருத்து என்ன என்று புரிந்து கொள்ளாமல் எப்படிக் குழம்பிக் கொண்டிருக்கிருரோ, அதுபோலவே பிரிவினைக் கொள்கையிலும் ஆச்சாரியார் நம்மைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. அவர் குறிப்பிடும் டில்லிச் சகோதரனையே நாம் திருடன் என்று சொல்கிருேம் என்பதை அவர் புரிந்து கொள்ளவில்லை.

டில்லி அண்ணனின் தொல்லை தாங்காது தான் மற்றச் சகோதரர்கள் பிரிந்துபோகத்துடிக்கிருர்கள் என்பதையும், ஆச்சாரியார் விளங்கிக்கொள்ளவில்லை. டில்லி அண்ணன் ஒரு பக்காத் திருடன் என்பதை ஆச்சாரியார் ஒப்புக்கொள்ளா விட்டாலும், ஆச்சாரியாரின் கதையில் 'டில்லி மூத்தவர்' பேர்போன திருடன் என்ற கருத்து எதிரொலிக்கிறது.

டில்லியார் வீட்டில் நகைகள் திருட்டுப்போக வில்லை. ஏன? பேர்போன திருடன வீட்டில் இன்னெரு திருடன் புகுவதற்கே அஞ்சத்தானே செய்வான! அதனுல் சமையலறை புகுந்து சாப்பாட்டை மட்டும் முடித்துக் கொண்டு போய்விடுகிருன். இதுதான நாங்கள் சொல்வதும். **'மூத்தவன் முறை தவ்றி நடக்கிருன், பாகத்தைப் பிரி!'** என்கிருேம். ஆச்சாரியார் சண்டையடித்துக்கொண்டாவது ஒன்ருக இருக்க வேண்டும் எனகிருர். ஆச்சாரியாருக்கு இன்னென்றையும் தெரிவித்துவிட விரும்புகிருேம்; "டில்லி அண்ணன் மற்றச் சகோதரர்களோடுஉடன் பிறந்தவனல்ல எனபதை அவர் மறந்துவிடக் கூடாது. தமிழ் நாட்டு மக்கள் உள்ளத்தில் ஊறிப்போயிருக்கும் பிரிவினைக் கருத்தை மாற்றிட இனிஎத்தனை குட்டிக்கதை எழுதியும்,எத்தனை சேதுபதிகள்சுப்ரமணியங்களைக் கோஷ்டி சேர்த்தும் பயனில்லை. காக்கை உருவெடுத்து வீட்டின் மேல் இருந்துகொண்டு 'தெரிந்ததா, தெரிந்ததா ?" என்று கரையும் சந்தர்ப்பமும் ஆச்சாரியாருக்கு நிச்சயம் கிடைக்கப் போவதில்லை. பரிதாபம்! அவருடைய தோல்விப் பட்டியலில் தட்சிணப்பிரதேசமும் ஆண்டிகள் கூடித் தீட்டிய திட்டமாகப் போகிறது! ★

இடம், பொருள்...

— 9-ம் பக்கத் தொடர்ச்சி —

தேவியாரை அழைத்து, "விண்ணில் உள்ள மங்கையரைக் காட்டிலும் அழகானவளே, பார்! காற்று வீசுவதனுல் மலர்களிலுள்ள மகரந்தப் பொடிகள், முத்துமாலையை அணியப் பெற்ற உன்னுடைய முலைகளின் நுனியில் உள்ள தேமலின் திரள்களைப் போன்று கற்களின்மேல் நெருக்கமாகச் சிந்திக் கிடக்கின்றன" என்கிருன். இதுவும் தன் தம்பியும், மற்றுமுள்ளோரும் உடன் கூடியிருக்கும் போதுதான் தன் மனேவியை இப்படி வர்ணிக்கிருன். தன் கணவன் இதுபோல் பிறர் மத்தியில் தன்னை வர்ணிப்பதைக் கண்டு நாணம், அச்சம், மடம், பயிர்ப்பு அமைந்த மானமகளிர் நடுங்குவர்! சாதாரண மனிதப் பண்புள்ள கணவனும் பேச நாணுவான்!! ஆனல் மிக்க மகிழ்வோடு சீதா பிராட்டியார் கேட்க, அவதார புருடன் ராமன் கூறியதாக இருக்கும், கம்பன் பாடலைக் காணுங்கள், வனம்புகு படலத்தில்.இதோ,அது!

"மனாங்கிளர் மலர்வாச
மாருதம் வரவீசக்

கணங்கிளர் தருசுண்ணங்
கல்லுடையன கானத்

தணங்கினு மினியாயுன்
னணிவடமுலை முன்றிற்

சுணங்கின மாவை
மானத் துறுவன வவைகாணய்."

......மற்ருேரிடத்தில் கம்பன் அழகான கங்கைநதியைக் காணுகிருன். ராமன், சீதை, இலக்குமனன் முதலானேர் படகில் அந்நதியைக் கடப்பதாக வர்ணிக்கிருன். நதியை அழகிய மங்கையாக உதாரணம் கூறிவிட்டான் வழக்கம் போல். மங்கை என்றதுமே அவர் தம் அழகிய அங்கங்களைக் காமரசம் பெருக வர்ணிக்காவிட்டால்தான் கம்பன் மனம் ஆறுதலடையாதே! நதியை மங்கையாகக் கூறியபின் அந்த மங்கைக்கு அழகான அங்கங்கள் கிடைக்காமல் தவிக்கிருன். பார்த்திருக்கிருன் நதியையே உற்று! ஒன்றுமே புலப்படவில்லை போலும் அவன் கற்பனைக்கு! பாழாய்ப்போன அந்தக் கங்கையின் நடுவில், உயர்ந்து நிற்கும் ஏதாவது மணற்குன்றுகளாவது இருந்திருக்கக் கூடாதா? அதுவுமில்லை. அதுவும் அதன் கரையில்தான் இருக்கின்றன. பார்த்தான். கங்கையை வெறும் மங்கையாகக் கூறிவிட மனம் வரவில்லை. சரி என்று கரையில் அங்கொன்றும், இங்கொன்றுமாகவுள்ள மணல் மேடுகளையும் இணைத்து, சந்தனம் பூசப்பட்ட, பெரிய முலைகளையுடைய கங்கையே என்று வர்ணிக்க ஆரம்பித்துவிடுகிருன்.

இப்படிப் பாடலுக்குப் பாடல் ஆபாசம். கீழ்த்தரமான ஆபாச வர்ணனைகள் பலகொண்ட அநேகம் பாடல்களை உள்ளடக்கிய பல படலங்கள்! இவ்வாறு காம ஆறே பெருக்கெடுத்தோடும் பல படலங்களைக் கொண்ட பல காண்டங்கள்!!

விருப்பு, வெறுப்பின்றி ஆராயுமிடத்து இன்றைக்கு மட்டுமல்ல, மனித இனம் உள்ள அளவுக்கு..., சீர்திருத்த வாதிக்கு மட்டுமல்ல, சிந்தனை படைத்த எவருக்கும் தோன்றக்கூடிய முடிவு ஒன்றுதான். அது "கம்பன் தந்த காவியம் ஓர் காமக்கடல்" என்பதே!

—ஔவையார் கோமான்

அஞ்சல் மூலம் கல்விப் பயிற்சி

THE BEST POSTAL TUTORIAL COLLEGE TIRUCHI

(1) 1956, அக்டோபர் S. S. L. C.,

(2) 1956, செப்டம்பர் இண்டர்மீடியட் (சென்னை)

தேர்வு எழுதும் மாணவர்கட்குத் தபால் மூலம் சிறந்த முறையில் பாடங்கள் அனுப்பிப் பயிற்சி தரப்படும்.

குறைந்த கட்டணம் ! வெற்றிக்கு உறுதி !!
வகுப்புகள் தொடங்கிவிட்டன ! இன்றே சேருங்கள் !!

உடனே 2 ஒரு அணு ஸ்டாம்புகளுடன் விண்ணப்பியுங்கள்.

ஏ. ராதாகிருஷ்ணன், நிருவாகி,
அஞ்சல் முறைக் கல்விப் பயிற்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி - 2.

காரைக்குடி
செல்வி பதிப்பகத்தின் சுவையான நூல்கள்

மா. இராசமாணிக்கனர்			
திருவள்ளுவர் காலம் யாது ?	...	ரூ.	1 0 0
தமிழர் திருமணத்தில் தாலி	...	„	1 8 0
தமிழ்மொழிச் செல்வம்	...	„	1 8 0
சைவ சமயம்	...	„	2 4 0
தமிழண்ணல்			
தாலாட்டு	...	„	2 0 0
மொழிவழிச் சிந்தனைகள்	...	„	1 4 0

மற்றும் அறிஞர் பெருமக்களின் எல்லா நூல்களும் கிடைக்கும்.

செல்வி பதிப்பகம்,
காரைக்குடி.

கருநிறக் கூந்தல் கண்டேன் !
கலையெழில் ஆடல் கண்டேன் !
ஒருகரம் கூந்தல் தாங்கி
உவப்புறக் கண்டேன் கண்டேன் !

அழகுதரும் கூந்தல் வளர்ச்சிக்குச் சிறந்தது

வைடா
சுகந்தவர்த்தினி

— தயாரிப்பு —

என்சியெம் இண்டஸ்ட்ரீஸ்,
40, வடக்குச்சித்திரை வீதி, மதுரை.

அழகப்பா வைத்தியசாலையின்

டானிக் சாந்தினி

பெண்களுக்கு ஏற்படும் சூதக வாய்வு, சூதக வயிற்றுவலி, அகால மாதவிடாய் மற்றும் சூதக சம்பந்தமான எல்லா வியாதிகளையும் குணமாக்கும் சிறந்த சூதக நிவாரணி.

தமிழ்நாடெங்கும் ஏஜண்டுகள் தேவை.

டி. என். சொக்கலிங்கம் பிள்ளை சன்ஸ்,
மருந்துக்கடை, மதுரை.

கழகச் செய்திகள்

கோவை மாவட்ட தி. மு. க. குழுக் கூட்டம்

24-6-56 ஞாயிறு காலை 10 மணியளவில், திருப்பூரில் வாலிபாளையம் ராலே நிட்டிங் கம்பெனியில், கோவை மாவட்ட தி. மு. கழகக் குழுக்கூட்டம் நடைபெறும். அதுபோது, (1) மாநில மாநாட்டுத் தீர்மானங்கள்; (2) மாவட்ட மாநாடு; (3) காலியான பொதுக்குழு உறுப்பினர் பதவிக்குத் தேர்தல் - ஆகியவைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று கோவை மாவட்ட தி. மு. க. செயலாளர் ஈ. வே. கி. சம்பத் அவர்கள் அறிவிக்கிருர்.

மாணவர் மாநாடு

16-5-56ல் திருச்சியில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக மாணவர் கிளையின் அமைப்புக் கூட்டத்தில் இரண்டாவது மாநில மாநாட்டைக் கோவையில் ஜுலை இறுதியில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது. ஆனல் அண்ணு அவர்களும் பொதுச் செயலாளரும் மாநாட்டுத் தேதியை மாற்றியமைக்க ஆலோசனை கூறியிருப்பதால் ஜுலையில் நடைபெற இருந்த மாநாடு காலங் குறிப்பிடாமல் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது என்று மாணவர் மாநில மாநாட்டு வரவேற்புக் குழுத்தலைவர் கோவைச் செழியன் அறிவிக்கிருர்.

முத்தமிழ் மன்றம்

24-6-56 ஞாயிறு மாலை 6 மணிக்கு சென்னை முத்தியாலுபேட்டை சாலை விநாயகர் கோயில் தெருவில் முத்தமிழ் மன்ற 2-ம் ஆண்டு நிறைவு விழா மேற்படி மன்ற மாடியிலே மன்றத் தலைவர் கா. வி. இராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் நடைபெறும். அவ்வமயம் தோழர்கள் டி. கே. சீனிவாசன், கண்ணதாசன் முதலானேர் சொற்பொழிவாற்றுவர்.

பாண்டியன் நாடக மன்றம்

24-6-56 மாலை 5 மணிக்கு திருவல்லிக்கேணி கே. எஸ். பாண்டியன் படிப்பகப் பணி மனையில் தோழர் திரு தென்னரசு அவர்கள் தலைமையில் "பாண்டியன் நாடக மன்ற"த் துவழக்க விழா நடைபெறும். அவ்வமயம் தோழர்கள் வளையாபதி முத்துக்கிருட்டிணன், மா. பா. சாரதி, நெல்லைக் கபிலன், எம். கே. மணி முதலியோர் சொற்பொழிவாற்றுவர்.

கோவை நகரத் தோழர்களுக்கு

22-6-56 இரவு 9 மணிக்கு கோவை நகர தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் தெப்பக்குளம் வீதியிலுள்ள நகர கழக அலுவலகத்தில் நடைபெறும். அது சமயம் செயற்குழுவில் காலியாக உள்ள இடங்களுக்குத் தேர்தல் நடைபெறும். தேர்தலில் நிற்க விரும்புகிற கழகத் தோழர்கள் 22ந் தேதி மாலை 6 மணிக்குள் செயலாளருக்கு அறிவிக்கும்படி வேண்டப்படுகிருர்கள். குறிப்பாக, செயற்குழுவில் பிரதிநிதிகள் இல்லாத வார்டுகளில் உள்ள தோழர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டுமென்று செயலாளர் எஸ். ஏ. ராசமாணிக்கம் அறிவிக்கிருர்.

எட்டுத் திசையிலும் நாம்!

—◉—

எட்டுத் திசையிலும் நாம் வளர்ந்தோம்—நமை
எத்திப் பிழைப்பவர் சீறுகின்ருர்—அண்ணன்
சுட்டு விரற்கடை தூக்கிவிட்டால்—அவர்
தூளுக்கும் தூளெனக் கூவிடடா!
பட்ட வடுக்களைக் காட்டிடடா!—அதிற்
பாடும் துணிவினைக் கூறிடடா!—இனித்
துட்டர்கள் பின்புறம் தாக்க வந்தால்—அவர்
தோளெங்கள் தாளுக்கென் றேதிடடா!

நட்ட நடுநிசி வேளையிலே—அந்த
நாயகர் பெற்ற சுதந்திரமோ—பிறர்
தொட்டுக் கொடுத்த சுதந்திரந்தான்—அந்தச்
சூரர்கள் போரிட்டுப் பெற்றதில்லை!
கட்டிக் கழகத்தைக் காத்துவரும்—அண்ணன்
காளையர் தம்மை அழைத்துவிட்டால்—கையில்
சுட்டி யிருக்கும் விலங்கினை நாம்—வளர்
காற்றிற் பறக்க உடைத்திடுவோம்!

வாலில் பறப்பது நம்கொடிதான்—மொழி
வண்ண மடைந்ததும் நம்வழிதான்—அந்தப்
பூனைகளும் கொஞ்சம் புத்தியடைந்திடப்
போதனை செய்ததும் நம்மவர்தான்!
ஆனை நிகர்த்தநம் சேனை பலம்—தனை
ஆறறி வுள்ளவர் ஒப்புகின்ருர்!—உடல்
கூனிய காங்கிரஸ் கோமகனர் மட்டும்
குக்கல் மதியினைக் காட்டுகின்ருர்!

கான மகுடிமுன் ஆடுகையில்—கரு
நாகத்திலும் கலை கண்டிடுவோர்—அது
தானும் கொதித்துக் கடிக்கவந்தால்—அதன்
சங்கடம் தீர்த்திடும் செய்கையைப் போல்
"போனது போகட்டும் வாருமையா!"—எனப்
புத்திமதி சொல்லிக் கூப்பிடுவோம்!—"இல்லை!
ஆனது ஆகட்டும் பார்ப்ப" மென்றால்—அவர்
ஆடி விழுந்திடப் போர்தொடுப்போம்!

தாயைப் பிரிந்தவர் சிங்களத்தில்—அண்ணன்
தன்னைப் பிரிந்தவர் புட்பகத்தில்—இளஞ்
சேயை மனைவியை வீட்டைப் பிரிந்தவர்
தேம்பி அழுவது சாவகத்தில்!
தூய இவர்கள் பிரிந்ததெல்லாம்—வெறும்
சோற்றுக் கடா! வெறும் சோற்றுக்கடா!—தெரு,
நாயி லிழிந்திவர் வாடுகையில்—வட
நாட்டவர் எங்கணும் வாழுகிருர்!

அன்னைத் திராவிடப் பொன்னடே!—உன்
ஆணை! தமிழ்மொழி மீதாணை!
மண்ணைப் பிரிந்தவர் மீண்டுமிங்கே—வரும்
மார்க்கத்தைக் காண முயன்றிடுவோம்!
அன்னையுன் நாட்டைப் பிரித்திடுவோர்—இல்லை
ஆவி யழிந்திடக் கண்டிடுவோம்!
கண்ணையும் காலையும் வெட்டியபின் இந்தக்
காய மிருந்தென்ன போயுமென்ன!

—கண்ணதாசன்.

அரசியல் நாட்குறிப்பு

★ **ஜூன் 4:** பம்பாய் நகரை மராட்டியருக்குக் கொடுக்க முடியாது என்று பிரதமர் நேரு மீண்டும் அறிவித்துள்ளார். ஐந்தாண்டுகள் கழித்து பம்பாய் நகரில் வாக்கெடுப்பு நடத்தி அந்த நகரம் யாருக்கு என்பது குறித்து இறுதி முடிவு செய்யப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

★ பூமியில் இருந்து 2 கோடியே 70 லட்சம் மைல் தொலைவில் உள்ள சுக்கிரன் கிரகத்தில் இருந்து ரேடியோ செய்தி கிடைத்திருப்பதாக அமெரிக்காவில் உள்ள ஒஹியோ ராஜ்யப் பல்கலைக் கழக அதிகாரி அறிவித்துள்ளார்.

★ **ஜூன் 5:** சீனுவுக்கு ஏராளமாக ரப்பர் ஏற்றுமதி செய்ய, மலாயா, சிங்கப்பூர் அரசாங்கங்கள் முடிவு செய்துள்ளன.

★ சட்ட விரோதமாகப் போர்க் கருவிகள் வைத்திருந்த குற்றத்திற்காக மலேயா இளவரசருக்கு ஆறு ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

★ **ஜூன் 6:** மலேயாவில் டாக்டர்கள் பற்றுக்குறை மிகவும் அதிகமாக இருப்பதால் இந்திய டாக்டர்கள் 25 பேரை வரவழைக்க மலேயா அரசினர் அதிகாரிகள் இந்தியா வருவதாகத் தெரிகிறது.

★ **ஜூன் 7:** தேயிலைத் தோட்ட நிர்வாகத்தில் தொழிலாளர்களுக்கும் பங்கு கொடுக்கச் சீக்கிரமே நடவடிக்கை எடுக்கப்படும் என்று டெல்லி அரசாங்க மந்திரி டி. டி. கே. அறிவித்துள்ளார்.

★ யுகோ நாட்டு ஜனதிபதி டிட்டோ ரஷியத் தலைவர்களுடன் மாஸ்கோவில், ஜெர்மன் விவகாரம் பற்றி 3 மணி நேரம் பேசினர்.

★ **ஜூன் 8:** பீகார் மாநிலத்தில், சர்க்கார் ஊழியர்கள் திருமணம் செய்து கொள்வதற்கு 21 வயது எல்லையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த எல்லை நிர்ணயம் இரண்டாண்டுக்குத் தானும்.

★ ரஷ்யாவின் பழைய பிரதமர் மாலன்காவ் பிரெஞ்சு நாட்டுக்குப் போவார் என்று தெரிகிறது.

★ ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்தில் குண்டு வைத்துத் தகர்ப்போம் என்று யாரோ ஒருவர் டெலிபோன் மூலம் மிரட்டியிருக்கிருர். இதனல் அதிகாரிகள் திகில் அடைந்துள்ளனர்.

★ **ஜூன் 12:** சென்ற மாதம் சென்னையில் நடைபெற்ற சர்க்கார் சிப்பந்திகள் மகாநாட்டில் "சர்க்கார் சிப்பந்திகளுக்குச் சம்பள உயர்வு கொடுக்க வேண்டும்" என்று சென்னை சர்க்காரைக் கேட்டுக் கொண்ட கோரிக்கையை, சென்னை சர்க்கார் நிராகரித்து விட்டது.